பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 12 செவ்வாய்க்கிழமை (27.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 01

# இலங்கைக்கு தாக்குதல் ஆயுதங்கள் வழங்குவதற்கு இந்தியா இணக்கம்?

## இராணுவத் தளபாடக் கொள்வனவுக்கு குறைந்த வட்டியில் 100 மில்லியன் டொலர் கடன்

கொழும்பு,நவம்பர் 27

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரில் பயன்படுத்துவதற்கென்று - பேரழிவு விளைவிக்கக்கூடிய - தாக்குதல் - ஆயுதங்களை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்திருப்பதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார இதழான 'த நேஷன்' மேற்படி தகவலை வெளியிட்டிருக்கிறது. 'யாருக்கு எதற்காக' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் இலங்கையின் மிக நெருக்கிய நட்பு நாடுகளில் ஒன்றாக இந்தியா வர்ணிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் -


இலங்கைக்குத் தாக்குதல் ஆயுதங்களை வழங்குவதற்கு இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது. அத்தோடு ஆயு தங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு மிகக் குறைந்த வட்டியில் 100 மில்லியன் டொலர்களைக் கடனாக இந்தியா வழங்கியுள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமன்றி, விடுதலைப் புலிகளின் கடற்செயற்பாடுகள் தொடர்பான புலனாய்வுத் தகவல்களை இலங்கைக் கடற்படையினருக்கு வழங்கி வருவதாகவும் 'தநேஷன்' பத்திரிகையின் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### அமெரிக்கா

அதேவேளை, இலங்கையின் மிக நெருங்கிய நாடான அமெரிக்காவும் சித்திரிக்கப்பட்டுள்ளது. (08ஆம் பக்கம் பார்க்க)

## உதய வேளையில் உங்களுடன்...



அன்புசால் வாசகர் பெருமக்களே!

ஆதரவாளர்களே, அபிமானிகளே!!

உங்கள் உதயன் நாளிதழுக்கு இன்று இருபத்திரண்டாவது பிறந்த நாள். அவன் இருபத்திமூன்றாவது அகவையில் இன்று கால் பதிக்கிறான்.

நாளின் நாயகன் சூரியன். உதயனின் நாயகர்கள் மக்களாகிய நீங்களே. ஈழத் தமிழ் மக்களில் ஒருவனாக நின்று அவர்களுக்குத் தொண்டனாக இருந்து பணியாற்றுவது உதயனின் பிரதான நோக்கும் போக்குமாகும். அவன் உதித்த முதல்நாளே வரித்துக்கொண்ட இலட்சியமும் அதுவே.

இன்னல்கள், இடுக்கண்கள், சோதனைகள், வேதனைகள் பல்வேறு வடிவங்களில் வந்து நெருக்கடிகளையும் அழுத்தங்களையும் தந்த போதிலும், மக்களாகிய நீங்கள் தந்த பலத்தினால், ஆதரவால் உங்களுக்குரிய சேவையைத் தளராது தலை நிமிர்ந்து நின்று செய்கின்றான் உதயன்.

உங்களுக்கான பணியை மிகுந்த பொறுப்புடனும், சமூக உணர்வுடனும் உதயன் நிறைவாகச் செய்துவருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் சுதந்திரம், பொருளாதார சுபீட்சம், அபிவிருத்தி, கல்வி மேம்பாடு, சமூக வளர்ச்சி, வாழ்வியல் உயர்ச்சி ஆகியன ஆரம்ப காலந்தொட்டு உதயனின் குறிக்கோள்களாக அமைந்தன.

அவற்றுக்காக உழைக்கும் சீரிய பணியிலிருந்து, உதித்த காலம் தொட்டு இன்றுவரை அவன் தளர்ந்து போனதில்லை. நீடிய வருடங்களாகத் தொடரும் போர்ச் சூழ்நிலையில் தமிழ் மக்களைப் போலவே உதயனும் இழப்புக்களை, நட்டங்களை, துன்பங்களைச் சுமந்தான். அதே போன்று உங்களைப் போலவே உதயனும் துவண்டு விடாமல் தனது பணியைத் தொடர்கிறான்.

உதயனின் வாழ்வியக்கத்தை சீர்குலைக்கவும் முடக்கிவிடவும் பல்வேறு தீயசக்திகள் வெவ்வேறு வடிவங்களில் முயன்றன; இன்னமும் முயன்றுகொண்டே இருக்கின்றன.

இப்போது நிலைமை மிகவும் ஆபத்தான கட்டத்துக்கு வளர்ந்திருப்பதை நீங்கள் நன்கறிவீர்கள். மறைமுகமாகவும், நேர்முகமாகவும் உதயனின் குரலை - மக்களின் குரலை - நசுக்கும் பல கைங்கரியங்கள் அரங்கேற்றப்பட்டன ; நடந்தேறுகின்றன.

உயிரிழப்புகளும், உடமைச் சேதங்களும் அடக்கி ஒடுக்கும் முனைப்புகளும் தொடர்ந்து சவால் விடுகின்றன.

ஆயினும் நீங்கள் உதயனுக்கு ஊட்டும் பலத்தினாலும், தோன்றாத் துணையாக நின்று வழிகாட்டும் பேரருள் சக்தியினாலும் உதயன் உங்களுக்குரிய சீரான பணியைச் சோர்வின்றி, தளம்பலின்றி, ஓய்வு ஒளிச்சலின்றி ஆற்றிவருகின்றான்.

உதயன், ஈழத்தமிழ் மக்களின் தொண்டனாக மட்டுமன்றி, பாரெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் அனைவருக்கும் தகவல் சொல்லும் சேவகனாகவும் மிளிர்கின்றான்.

உதயனின் வழி சிறப்பு வழி. மக்கள் பத்திரிகை என்று தன்மீது பதிக்கப்பட்ட தனித்துவ முத்திரையின் மகிமையும் மாண்பும் மங்காமல், இடர்களின் மத்தியிலும் உங்களுக்காக உழைக்க உறுதி பூண்டுள்ளான்.

உதயனுக்கு நீங்கள் பொழியும் ஆதரவும், அன்பும், நட்பும் எங்களது சேவையை வினைத்திறனுடனும் வீச்சுடனும் செய்வதற்கு அரிய ஆதாரங்கள்.

அன்பு வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், செய்தியாளர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இன்றைய நன்னாளில் உதயன் தனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறான்.

- நிர்வாகத்தினர்.

## புதுக்குடியிருப்பிலும் கிளிநொச்சியிலும் நேற்று மாலை விமானக் குண்டுவீச்சு

### பொதுமகன் ஒருவர் காயம்; புலிகளின் இலக்கு என்கிறது அரசு

கிளிநொச்சி,நவ. 27

இலங்கை விமானப் படையின் கிபிர் குண்டுவீச்சு விமானங்கள் நேற்றும் இரண்டாவது நாளாக முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பிலும், கிளிநொச்சியிலும் குண்டுவீச்சுக்களை நடத்தியிருக்கின்றன. இதன்போது இளைஞன் ஒருவர் காயமடைந்தார். வீடுகள் பல சேதமடைந்திருக்கின்றன.

நேற்றுமாலை சுமார் 5 மணியளவில் புதுக்குடியிருப்பு நகரப்பகுதிக்கு அருகே கிபிர் விமானங்கள் குண்டுவீச்சுக்களை நடத்தின. இரண்டாம் வட்டாரம் மக்கள் குடியிருப்புக்கள் மீது பத்துக் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன என்று கூறப்பட்டது.

இதன்போது பல வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் அப்பகுதியில் இருந்த கன்னியர் மடமும் சேதமடைந்தது.

இரண்டாவது தடவையாக சுமார் 5.20 மணியளவில் கிளிநொச்சி நகரில் இருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில் குண்டுவீச்சு நடத்தப்பட்டது. இக்குண்டுகள் மக்கள் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்து வெடித்தன.

இதில் காந்தி நிலையத்தைச் சேர்ந்த பத்மராஜ் (வயது - 18) என்ற இளைஞன் படுகாயமடைந்தார்.

அவர் சிகிச்சைக்காக கிளிநொச்சி

(08ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் பாடசாலை மீது ஷெல்! 5 மாணவர், 2 ஆசிரியர் படுகாயம்!!

கொழும்பு,நவ.27

மன்னார், மல்லவராயன் கட்டுப் பகுதியில் அமைந்துள்ள கட்டையடம்பன் றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வளவுக்குள் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் ஐந்து மாணவர்களும் இரண்டு ஆசிரியர்களும் படுகாயமடைந்தனர்.

அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ள இந்தப் பாடசாலை மீது புலிகளே ஷெல் தாக்குதல்களை நடத்தினர் எனப் பாதுகாப்புப் படைகள் குற்றம் சுமத்தின. ஆனால், அதனைப் புலிகள் மறுத்துள்ளனர்.

படுகாயமடைந்த இண்டு மாணவர்களும், இரண்டு மாணவிகளும், ஓர் ஆசிரியரும் முருங்கன் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மற்றோர் ஆசிரியையும், மாணவியும் மேலதிக சிகிச்சைக்காக மன்னார் பொது மருத்துவமனைக்குக் கொண்டுவிரையப்பட்டனர் என்று படை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

றோசலின் என்ற ஆசிரியையும், றொசான் என்ற மாணவனுமே மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் றொசான் அடுத்த மாதம்

(08ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் வாகனங்களுக்கு 'யுனிசெவ்' குண்டு துளைக்காத தகடுகளை பொருத்தியதா?

### விசாரணை நடத்தக்கோருகிறார் வீரவன்ஸ

கொழும்பு,நவ.27

குண்டு துளைக்காத தகடுகளை புலிகளின் வாகனங்களுக்கும் 'யுனிசெவ்' அமைப்பு பொருத்திக் கொடுத்ததா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ஸ நேற்று நாடாளுமன்றில் அர்சைக் கோரினார்.

நேற்று நாடாளுமன்றில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் கூறியவை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் சபையோடு இணைந்த 'யுனிசெவ்' நிறுவனம், இலங்கையிலிருக்கும் பிரிவினைவாதப் புலிப்பயங்கரவாதிகளுக்குச் சார்பாகச் செயல்படுவது தொடர்பாக இந்தச் சபையின் கவனத்துக்கு பல முறை கொண்டு வந்துள்ளோம்.

'யுனிசெவ்' நிறுவனத்தின் அதிகாரிகள் புலிப் பயங்கரவாதிகளுக்காக செய்து கொடுக்கும் மற்றொரு உதவி தொடர்பாகவும் இந்தச் சபையின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

'யுனிசெவ்' நிறுவனத்துக்காக வடக்கு. கிழக்கில் சேவையாற்றும் உறுப்பினர்கள்

(07ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் தின உரை இன்று மாலையில்

கிளிநொச்சி,நவ.27

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் நிகழ்த்தும் - அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த - வருடாந்த மாவீரர் தின உரை இன்று மாலை 5.34 முதல் 6.05 வரை இடம் பெற உள்ளது.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பூட்டப்பட்ட வீட்டுக்குள் அழுகிய நிலையில் தனித்து வசித்த வயோதிப மாதுவின் சடலம்

யாழ்ப்பாணம்,நவ.27

தனித்து வசித்த வயோதிபப் பெண் ஒருவர் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டார். அவரின் மரணத்தில் மர்மம் இருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

யாழ்.நகர் 2ஆம் குறுக்கு வீதியில் தனியாக வசித்த செபமாலை மாசிலாமணி(வயது 77) என்பவரே சடலமாக மீட்கப்பட் டுள்ளார்.

பிரஸ்தாப வயோதிப மாதுவின் நடமாட்டம் இல்லை என்பதை அறிந்த அயலவர்கள் வீட்டுக்குச் சென்று பார்த்தனர். அவ்வேளை அங்கு துர்நாற்றம் வீசியதை அடுத்து பொலீஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

பொலீஸார் அங்கு சென்று பூட்டப்பட்டிருந்த வீட்டை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது உருக்குலைந்த நிலையில் சடலம் காணப்பட்டது. யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

பிஸ்தாப சடலம் மீட்கப்பட்ட அறையின் கூரை ஓடுகள் சில அகற்றப்பட்டிருந்ததையடுத்து பெண்ணின் மரணத்தில் மர்மம் இருப்பதாகக் கருதிய நீதிவான் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலீஸாருக்கு உத்தர விட்டார். (அ-1)


## அரிய சந்தர்ப்பம்




D.V 2009 ஆம் ஆண்டுக்கான அமெரிக்கா லொட்றி விசா விண்ணப்பம் தற்பொழுது ஏற்றுக் கொள்ளப் படும். முடிவு திகதிக்கு இன்னும் 5 நாள்களே உண்டு! உங்கள் பதிவுக்கு முந்துங்கள்!

திருமுருகன் கொம் நெற்

259, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 7835 | 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. T.P. 021 222 7310



வசீகர தோற்றத்திற்கு

## சந்தனாலேப




(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், [illegible]

[illegible]

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்

'சிவா நறுமணப் பூங்கா'

288, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியையும் பகுதித் தலைவருமாகிய
திருமதி மகேஸ்வரி கருணாமூர்த்தி
அவர்களின் அன்புத் தாய்

### திருமதி கார்த்திகேசு சிவக்கொழுந்து

அவர்கள் 23.11.2007 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார். இச்செய்தியானது எம்மையெல்லாம் துன்பத்தில் ஆழ்த்தி உள்ளது. அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினரின் துன்பத்தில் நாமும் பங்குகொள்வதுடன் அவரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்
யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, புத்தூர்.

(68329)

## மரண அறிவித்தல்

### சூசைப்பிள்ளை அல்போன்ஸ் லிகோறி

(பிறிமா ஆலை உத்தியோகத்தர், திருமலை)



இளவாலை, நல்லாயன் வீதியைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப் பிள்ளை அல்போன்ஸ் லிகோறி (25.11.2007) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப் பிள்ளை - யக்கோவா தம்பதியரின் அன்பு மகனும், பூபதியின் (ஓய்வு பெற்ற தாதி, திருமலை) அன்புக் கணவரும், பிரியதர்சினி (பேபி - நில அளவையாளர்), தர்ஷன் (பிறிமா ஆலை உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாம் முரளி தரனின் (M.B.B.S., திருமலை வைத்தியசாலை) அன்பு மாமனும், அபினாஸ், அர்ச்சுன், அர்ரிந் ஆகியோரின் பாசமிகு பேரனும், மலர், பற்றிமா, சேவியர் (காங்கேசன் சிமெந்துக்கூட்டுத் தாபனம்), FR.அன்ரன் ஜோர்ஜ், ராஜம், நேசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மரியநாயகம், செல்லையா (ஆங்கில ஆசிரியர்), சேவியர், யசோ, ஆனந்தன் (கட்டட ஒப்பந்தக்காரர்), றோகினி ஆகியோரின் மைத்துனரும், சுபோ, அமல், விமல், நிமல், கிறிஸ்ரி, நிஷா, கசில்டா, தர்சினி ஆகியோரின் மாமனும், யுஸ்ரினா, யூலியன், கிறிஸ்ரிகா லின்சி ஆகியோரின் பெரியப்பாவும், டியோனி, றிக்சி, நெகேமி, நீறஜா ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைள் இன்று (27.11.2007) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் திருமலை புனித மரியாள் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*(அன்னாரின் துக்க அனுஷ்டிப்பு சென்.யூட் லேன், இளவாலை செல்லையா வீட்டில் இடம்பெறும்)*

தகவல்:
நேசன், அருட்பணி S.A.ஜோர்ஜ்.
T.P. : 0012096487664

(68325)

# இணுவில் இந்துக் கல்லூரியில் மீண்டும் வியாழனன்று நாசவேலை

வலி.வடக்கு,நவ.27

இணுவில் இந்துக் கல்லூரியில் மீண்டும் விஷமிகள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு கல்லூரி மாணவர்கள் பயன்படுத்தும் குடிதண்ணீர் கிணற்றினுள் கழிவு ஒயில், கலர் திரவம் என்பன ஊற்றப்பட்டுள்ளன. கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் வெட்டி வீழ்த்தப்பட்டு நாசமாக்கப்பட்ட வாழைகளும் கிணற்றுக்குள் வீசப்பட்டுள்ளன.

ஏற்கனவே சேதப்படுத்தப்பட்டு திருத்தப்பட்ட வகுப்பறைகளின் கதவுகள், கட்டடம், பிரார்த்தனை மண்டபம் என்பன மீண்டும் கடந்த வியாழக்கிழமை இரவு சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவங்கள் சம்பந்தமாக ஏற்கனவே நால்வர் சுன்னாகம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டதைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை -

இரண்டு மாணவர்கள் தாக்கப்பட்டதாக பழைய மாணவர்கள் மூவருக்கு எதிராக பெற்றோர்களினால் சுன்னாகம் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை மீண்டும் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-1-86)

# மருந்தக உரிமையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சகல தனியார் மருந்தக உரிமையாளர்கள் மற்றும் முகாமையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெறும்.

இக்கலந்துரையாடலில் சகலரையும் கலந்துகொள்ளுமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-1)

# தென்மராட்சி அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம்,நவ.27

தென்மராட்சி வலய பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுள்ளார். (203)

# கொக்குவில் இந்து மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்,நவ.27

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இருந்து ஜி.சீ.ஈ.(சாதாரண) தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு வழங்கப்படவுள்ளன.

மாணவர்களை தமது பெற்றோருடன் சமுகமளிக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (1)

# அடுத்த ஆண்டுக்கான ஓய்வூதியத் திகதிகள்

யாழ்ப்பாணம்,நவ.27

அடுத்த வருடத்திற்குரிய (2008) ஓய்வூதியம் வழங்கும் திகதிகள் திறைசேரிப் பணிப்பாளரினால் பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளன.

ஓய்வூதிய தினம் பற்றிய விவரம் வருமாறு -

ஜனவரி-10,பெப்ரவரி -11, மார்ச் -11, ஏப்ரல் - 9, மே -8, ஜூன்-12, ஜூலை - 10, ஓகஸ்ட் - 12, செப்ரெம்பர் -11, ஒக்ரோபர் - 07, நவம்பர் 11, டிசெம்பர் -10 (1)


**படிவம்**

இலங்கை கணக்காய்வு சேவையின் வகுப்பு II தரம் II இல் கணக்காய்வு அத்தியட்சகர்களைச் சேர்ப்பதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2007 விண்ணப்பப் படிவம் உண்டு.

முடிவுத்திகதி
31.12.2007

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.


## தவறிவிட்டது

ஆசிகுளம், வவுனியா என்னும் முகவரியைச் சேர்ந்த சிவப்பிரகாசம் யசீதா என்பவரது தேசிய அ.அட்டை (866730512 V) தெல்லிப்பழை, இலங்கை வங்கிக்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இராமநாதன் நுண்கலைக்கழகம், பெண்கள் விடுதி, மருதனார்மடம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (68334)


## உடன் விற்பனைக்கு

பைரகா புறொயிலர் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். 29.11.2007 Prima சிவப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் பெற்றுக்கொள்ளலாம். பதிவுகளை மேற்கொள்ளவும்.

திருமகள் களஞ்சியம்,
சங்கிலியன் புளியடி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 3270


# மனைவியின் காதைக் கடித்துத் துண்டாக்கிய கணவன் கைது!

கொழும்பு, நவ.27

மனைவியின் காதைக் கணவன் கடித்துத் துண்டாக்கிய பரபரப்புச் சம்பவமொன்று மாத்தளையில் இடம் பெற்றிருக்கின்றது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து மாத்தளை வைத்திய சாலையில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை மூலம், துண்டான காதின் பகுதி கச்சிதமாகப் பொருத்தப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. சம்பவம் தொடர்பில் கணவன் மாத்தளை பொலிஸாரால் கைதுசெய்யப் பட்டார்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பு
பண்டாரநாயக்க
ஞாபகார்த்த மண்டபத்தில்
23.11.2007 அன்று
நடைபெற்ற பட்டமளிப்பு
விழாவில் உயர்தேசிய
கணக்கியல் டிப்ளோமா
(H.N.D.A) சான்றிதழ்
பெற்ற

### சிவகடாட்சம் சிவச்செந்தூரன்

அவர்களை மேலும் மேலும் பல பட்டங்களைப் பெற்று வாழ்வில் சிறப்புற வாழ்த்துகிறோம்.

*வாழ்த்துவோர்:*

அப்பா, அக்கா, அண்ணா, அண்ணி, தம்பிமார் தங்கைமார், மாமா, மாமிமார், சித்தப்பா, சித்தி.

*வேலணை கிழக்கு, வேலணை - 03.* (68333)

## சாவகச்சேரி பிரதேச சபை

**01.01.2008 முதல் 31.12.2008 வரை**

சந்தை/ இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான

### மீள்கேள்வி அறிவித்தல்

17.11.2007 திகதிய பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட கேள்வி அறிவித்தல் மீள்கேள்வி அறிவித்தலுக்கு விடப்படுகின்றது.

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி: 07.12.2007 (பி.ப 1 மணி வரை)
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி: 10.12.2007 (ந.ப. 12.00 மணிவரை)
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி: 11.12.2007 (மு.ப.10.30 மணி)

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
26.11.2007

கு.ந.பாலச்சந்திரன்,
செயலாளர்.

(சி/54487)

## மரண அறிவித்தல்கள்

### மார்க்கண்டு ஞானசுந்தரம்

(இளைப்பாறிய வங்கி உத்தியோகத்தர் H.S.B.C.)

மலேசியாவை பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு ஞானசுந்தரம் அவர்கள் நேற்று (26.11.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நாகரஞ்சிதத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மார்க்கண்டு - சின்னம்மா தம்பதியினரின் மூத்த புத்திரனும், காலஞ்சென்ற தம்பையா - யோகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகசிங்கம், தவமணி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற வசந்தி மற்றும் ஆனந்தகுமார், ஜெயந்தி, தமயந்தி, ஞானக்குமார், உதயகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜினி, தளையசிங்கம், ஜெகசீலன், சுனிதமலர், சுபித்தா ஆகியோரின் மாமனாரும், அர்ச்சுனா, அர்ச்சனா, ஜனனி, ஜனந்தன், ஜனாலன், தினேஷ், பானுதி, யதுர்ஷன், வசந்ததீபா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2007) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைவாணி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
வொக்கா(மனைவி)
பிள்ளைகள்.

(68332)

### சங்கரப்பிள்ளை நடராஜா

(மதுஜா ரேட்ஸ் உரிமையாளர்)

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை நடராஜா நேற்று (26.11.2007) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட மகனும் அமரர் நாகேஸ்வரியம்மாவின் அன்புக் கணவரும் ராதிகா சர்வானந்தராஜா, கீர்த்திகா பிரபாகரன், வாகீசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிரோக்கா, சாருஜன், சிவானுஜன், தருநிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/54495)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் உதித்த 22 ஆவது ஆண்டு நிறைவு இன்று

## மக்களிடம் தனக்கெனத் தனியிடம் பிடித்துள்ளவன்

அன்புசால் பெருந்தகையீர்!



'உதயன்' நாள் இதழ் இன்று 22 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுவது கண்டு மகிழ்ச்சி அடைகின்றோம். யாழ்ப்பாணத்தில் வெளிவரும் நாளிதழ்களில் தனக்கென ஓர் இடம் பிடித்துக் கொண்ட உதயன் பத்திரிகை நீண்ட நாள்களாக இந்த நாட்டில் மக்களுக்கான பணிகளைப் பூர்த்திசெய்து எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றுள்ளது. சமயம், அரசியல், பொருளாதாரம், அறிவு சார்ந்த அனைத்தையும் உரிய நேரத்தில் வெளிக்கொணருவதில் முதன்மை பெற்று விளங்குகின்றது.

22 ஆண்டுகள் தனக்குரிய பணிகளை தலைநிமிர்ந்து நின்று செயற்படுத்துகின்றது. இன்று மக்கள் படும் அல்லல்களை உலகத்தவர் எளிதாக விளங்கிக் கொள்ளும் வகையில் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. தனது மக்கள் பணியில் பல சோதனைகளையும் வேதனைகளையும் சுமந்த போதிலும் பல சாதனைகளையும் புரிந்துவருவதைப் பாராட்டுகிறோம்.

புனித பணியாற்றிவரும் பிரதம ஆசிரியர், பத்திரிகையாளர்கள் மற்றும் பணியாளர்கள், நிர்வாகிகள் ஆகிய அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

உதயன் நாளிதழ் தொடர்ந்தும் தனது பணிகளைத் தளர்வின்றி ஆற்றுவதற்கு மக்கள் தமது ஆதரவை வழங்க இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

*'என்றும் வேண்டும் இன்ப அன்பு'*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹாசந்நிதானம்.
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## மனம் தளராது பணி தொடர்க!



தாய் மண்ணை நேசித்து பத்திரிகா தர்மத்தைப்பேணி தினமும் வாசகர்களைத் திருப்திப்படுத்தும் உதயன் நாளேட்டை ஆண்டுதோறும் பாராட்டுகின்ற வாய்ப்பு எமக்கும் கிடைக்கிறது.

கண்ணியமும் கட்டுப்பாடும் நிறைந்த இச்செய்தித்தாளின் அலுவலர்கள் அனைவரையும் நான் பெரிதும் மதிக்கின்றேன். எங்கள் தேவஸ்தானத்தின் முக்கியமான நிகழ்வுகளைக் காலத்துக்குக் காலம் வெளியிட்டுவரும் நன்றியை நாம் பாராட்டு கின்றோம்.

நாட்டிலே ஏற்படுகின்ற அசாதாரண சூழ்நிலைகளிலும் தினமும் முக்கியமான நிகழ்வுகளை இச்செய்தித்தாள் வெளியிட்டுக் கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே எதிர்காலத்திலும் மனம் தளராது, தவறாது இச்செய்தித்தாள் வெளிவர வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்,
*ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*

## தகுதியான செய்திகளை தரம்மிக்கதாகத் தருபவன்

மாலிலங் கையேந்தி வணங்க உதயஞ்செய்து, கண்ணொளி விளங்கப் புறவருள்கடிந்து எம்மையெல்லாம் மகிழ்விக்கும் சூரியனைப்போன்று, உதயன் பத்திரிகையும் உதயத்திலேயேதோற்றங்கொண்டு மக்களனைவருக்கும் உற்



சாகச் சக்தியூட்டி உளமகிழ வலம்வந்து கொண்டிருப்பதும் ஒரு தவச்செயலே. மனித சமூகத்திற்காகன ஆரோக்கிய நல்வாழ்விற்கினிய செய்திகளாலும், துணிச்சலோடு இணைந்த ஆசிரிய தலையங்க விமர்சனங்களாலும், இன்னும் மனிதனுக்கு வேண்டப்படும் பலதர செய்திகளாலும், செவியினும் சிந்தையினும் புத்துணர்வுகளைப்பெறத் தானமாகத் தந்து தனது இருபத்திரண்டாவது பிறந்ததினத்தை உதயன் கொண்டாடுகிறது. சூரியன் காலை, நண்பகல், மாலை நேரங்களில் எவ்வாறு விதம்விதமான உஷ்ணங்களைத்தந்தும் இனிய சுபாவங்களை வர்ஷிக்கிறதோ அதேபோன்று உதயன் பத்திரிகையும் முதற்பக்கம், நடுப்பக்கம், கடைப்பக்கம் என்றமைந்து தகுதியான செய்திகளைத் தரம்மிக்கதாக அமைத்து வாசகர்களது தேவைகளை நிறைவுசெய்து வளர்கிறது. சூரியனைச் சிலசமயம் கருமேகங்கள் கூடி மறைப்பது போன்று உதயனும் தனது செழுமைகளை சிலசமயங்களில் மறைக்கும் சக்திகொண்டதாக வளர்கிறது. இதுவும் வேண்டியதே. பத்திரிகாதர்மம் அத்தகையதே.

உதயன் பத்திரிகை வாசகர்கட்கு செய்திகள் தரும்போது, காலத் திற்கும், இடத்திற்கும் ஏற்ப வாசகர்களது உணர்வுநிலைகளிற்கேற்றவாறு உலகில் நடைபெறுவதைக்கூறி, இக் கருத்துகளோடு கலந்தும், கலவாமலும் ஏறுநடை போடுகிறது.

*''எவரெவர் எத்திறத்தர்: அத்திறத்தராயநின்று*
*அவரவர்க்கு, ஆவனகூறி - எவரெவர்க்கும்*
*உப்பாலாய் நிற்ப மற்று எம்முடையார்''* என்ற

குமரகுருபர சுவாமிகளது அடியொற்றி வளர்கிறது உதயன்.

மனிதனுக்கு வேண்டப்படும் எல்லா இலட்சியங்களும் கைகூட அவரவருக்கேற்றதாக உதயன் திறமையாகச் செயல்படுகிறது. இதனையே யசுர்வேதம் ''ஸ்வாத்யாய புண்யம்'' எனக்கூறுகிறது.

அச்சுறுத்தல், துன்பம் அபாயம் என்றெல்லாம் சந்திப்பதும் ஒரு துணிவுதான். வானிலும் பயங்கர மின்னல், புயல் என்றெல்லாம் இருப்பதை ஜனசமூகம் தாங்கிக் கொள்கிறது. அதேபோன்று உதயனும் அவலங்களைத் தாங்கிநிற்பது ஒரு புதினமல்ல.

உதயன் பத்திரிகை நீடுழி வாழ்ந்து சிறப்போடு, இனிதே வலம்வர, இவற்றிற்கு துணைசார்ந்துநிற்கும் சகலருக்கும் மாவைக்கந்தனது திருவருள் இணைய வேண்டுமெனப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள்
ஆதினகர்த்தா - பிரதமகுரு,
மாவையாதீனம்.
*மாவிட்டபுரம்,*
*கந்தசுவாமி கோயில்.*

## 'உதயனே' பல்லாண்டு வாழ்க!

தரமிகு தகவலே தருவது எனுமுயர்
திறமிகு நெறியினில் துணிவுடன் தொடரும்
உரமிகு உறுதியில் இருபத்திரண்டு
ஆண்டுப் பணியினில் நிறைவது நிலவிடப்
பரவிடும் புகழுடன் சேவை புரிந்தே
பாரினில் எங்கள் வாழ்வது துலங்கிட
இரவியாய் ஒளிதரும் இதழே! நீயெம்
இதயம் நிறைந்தே பல்லாண்டு வாழ்க!

-நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்.

## சாதனை படைக்கும் பத்திரிகை



உதயன் பத்திரிகையின் 22வது ஆண்டு நிறைவில் வாழ்த்துக்களையும் ஆசீர்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். இலங்கையில் இன்று ஊடகங்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட சவால்கள், அச்சுறுத்தல்கள் மத்தியில் உதயன் பத்திரிகை இலங்கையில் வட பகுதியில் துணிவோடு நிமிர்ந்து நின்று சாதனை படைத்திருக்கின்றது என்றே கூறவேண்டும். அன்றாட பத்திரிகையை வெளியிடுவதே ஒரு கடின அனுபவமாக இருக்கின்ற போது அச்சுறுத்தல்களும் மரணப் பயமும் நிறைந்திருக்கின்ற போது பத்திரிகை தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதில் விசேட கவனம் கொண்டு செயற்பட்டுள்ள நிர்வாகத்தினர், ஆசிரியர், பணியாளர்களை மகிழ்வோடு வாழ்த்துவதோடு பணி தொடருங்கள் என்று ஆசிகூற விரும்புகின்றோம்.

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை,
*யாழ்.ஆயா, ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.*

## மக்கள் சேவையைப் போற்றும்படி ஆற்றுபவன்

உதயனின் இருபத்திரண்டாவது பிறந்த நாளை முன்னிட்டு எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறுவதில் மிக பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.



உதயன் பெரும் சோதனைகளைச் சந்தித்த போதிலும் மக்களுக்கு தனது கடமைகளை செய்து வந்தது மிகவும் போற்றப்பட வேண்டிய விடயமாகும். உண்மையான செய்திகளையும் ஆன்மீக அறிவுரைகளையும் மக்களுக்குத் தெளிவுபடுத்தி மக்களின் நல்லாதரவைப் பெற்றுள்ளது உதயன். அத்தோடு, வெளிநாடுகளில் வாழும் எமது சகோதரர்களுக்கும் தகவல்களையும் நோக்கங்களையும் எடுத்து இயம்புவதில் முதன்மையானதும் மேலானதுமான ஒரு தெய்வீக இடத்தைப் பிடித்துள்ளது.

காலையில் சூரியன் உதிக்கும்போது, உதயனும் மக்களின் கரங் களில் வந்து உதயமாகும்போது அவர்களின் மனங்களில் இருந்த ஐயப் பாடுகள் நீங்குவதை அவதானிக்க முடியும். தன்னலமற்ற தனது சேவையை இன்றைய கால கட்டத்திலும் தவறாது செய்து வருவது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

மேலும் உதயன் தனது தொழில் ஸ்தானத்தில் அமைந்து பணிபுரியும் சகல உத்தியோகத்தர்களும் எல்லாப் பெறுபேறுகளும் பெற்று நிறை வாழ்வு வாழவும் உதயன் தனது சேவையை மேலும் திறம்பட ஆற்றுவதற்கு எல்லாம் வல்ல அம்பிகையின் திருவடி களை வணங்கி எல்லோரையும் வாழ்த்தி ஆசி கூறுவதில் பெரும் மகிழ்ச்சி யடைகின்றேன்.

*சத்யம் புறுயாத் பிறியம்*
*புறுயாத்த புறுயாத் சத்தியம பிறியம்*
*பிறியஞ்ச நாந்றுதம்*
*புறுயாதேச தர்மஜ: சநாதந:*

என்ற சுலோகத்திற்கு அமைவாக உதயன் அழிவில்லாத தர் மத்தைக் கடைப்பிடித்து ஆற்றும் சேவையை யாராலும் மறக்க முடியாத கடைமையுடையவர்களாகவுள்ளோம்.

*சுபமஸ்து!*

கிரிஜாகலாப முத்தாமணி ச.மகேஸ்வரக்குருக்கள்
*சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி.*

## மக்களின் அன்றாட வாழ்வில் ஒன்றாகக் கலந்தவன்

யாழ்.மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்து விட்ட உதயன் பத்திரிகை 23 வது அகவைக்குள் காலடி வைப்பதை யிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

இன்று உலகம் தொடர்பாடலில் மிக உயர் தொழி நுட் பத்துடன் மிக விரைவாக வளர்ந்து வரும் வேளையில், யாழ்ப்பாணத்தில் வாழும்நாம் இன்னமும் அந்த உச்சப் பயன்பாட்டைப் பெறமுடியாது பின் நிற்கிறோம். தொடர்பாடலில் முக்கிய பங்கை வகிப்பது பத்திரிகையாகும். இன்று பொருளாதார நெருக்கடிகள், உள்நாட்டுயுத்தம், பத்திரிகையாளருக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் ஆகியவற்றினால் பத்திரிகைகள் தங்கள் முழுமையான பயன்பாட்டை சுதந்திரமான முறையில் செயலாற்ற முடியாமல் உள்ளது.



இன்று எமது பிரதேசத்தில் காணப்படும் பொருளாதார நெருக்கடிகள் யுத்தம், வன்முறைகள் மத்தியில் கடந்த 22 ஆண்டுகளாக பங்களிப்பை சமூகத்திற்கு சிறப்பாக ஆற்றிவரும் உதயனுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

மக்களின் அன்றாட தேடல்கள், நாளாந்தத் தகவல்கள், சிறந்த விமர்சனங்கள், அரசியல் நிலைவரங்கள், பொருளாதாரச் செய்திகள் ஆகியவற்றை அள்ளி வழங்கிவரும் உதயன் வாழ்க! வளர்க!

வண.செ.பி.நேசகுமார்
*யாழ்.குருமுதல்வர், இலங்கைத் திருச்சபை.*

## இடைவிடாது வெளிவரும் பத்திரிகை



எம்மண்ணில் இருபத்திரண்டு ஆண்டுகளாக மக்களை ஆற்றுப்படுத்தும் சேவையில் பங்கு கொண்ட உதயன் பத்திரிகையின் பிறந்தநாள் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகிறேன். நீதியை, நிம்மதியை, உண்மையை, அறிவை மக்களுக்கு வழங்குவதே பத்திரிகைத் தர்மம். உதயன் பத்திரிகை கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக தளராது தன்பணி தொடர்வது மிகவும் பாராட்டுக்குரியது. எல்லா நிலையிலும் இடைவிடாது உதயன் பத்திரிகை வெளிவருகிறது. இப்பணியில் தம்மை அர்ப்பணித்த அனைவரையும் வணங்குகிறேன். வாழ்த்துகிறேன். மக்கள் மனதில் ஆறுதலையும், இம்மண்ணில் அமைதியாகவும், ஒற்றுமையாகவும் ஓங்கி வளர்த்தெடுத்து அச்சமற்ற புதியதோர் சூழலை உருவாக்கி மக்கள் இன்புற்று வாழ உதயன் பத்திரிகையின் உன்னதபணி தொடர வேண்டுகிறேன். இறையருளாலும், மக்களின் மனம் நிறைந்த வாழ்த்தாலும் நித்தமும் உதிக்கும் கதிரவன் போல் காலமெல்லாம் உதயன் மலர வாழ்த்தி அமைகிறேன்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்.




## ஊடகப் பணியாளருக்கு உந்து சக்தியாகட்டும்



உதயன் செய்தித்தாள் ஊடகப்பணி வளர்ச்சியின் 23 வருடத்தில் இன்று தனது பாதத்தைப் பதிக்கின்றமையிட்டு பெருமகிழ்வுடன் வரவேற்கின்றேன். வாழ்த்துகின்றேன்.

"ஏசுவரான். எரிப்பார்கள். அஞ்சவேண்டாம்; உண்மையை எழுதுங்கள், உண்மையை எழுதுங்கள்" என்ற யோகர் சுவாமிகளின் சிந்தனை என் உள்ளத்தில் எழுகின்றது. "நான் சத்தியத்துக்குச் சான்று பகர்கின்றேன். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்ற இயேசு பிரானின் வாக்கு ஊடகப்பணியாளருக்கு உந்து சக்தியாக அமையட்டும்.

கடந்த காலங்களில் 'உதயன்' ஊடகவியலாளர்கள் பலருக்கும் ஏற்பட்ட துன்பியல் சம்பவங்களும் இவ்வேளையில் என் உள் எத்தை நெருடுகின்றன. துணிவுடன் பணியாற்றும் 'உதயனின்' பணி தொடர்ந்து செல்ல என் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

பேரருட்திரு கலாநிதி டி.எஸ்.தியாகராஜா
தென்னிந்தியத் திருச்சபை,
யாழ். திருமண்டலப் பேராயர்.
*பேராயர் இல்லம்,*
*வட்டுக்கோட்டை.*

## மக்களுக்கு ஒளியாகத் திகழும் நாளிதழ்

மக்கள் நாளிதழான உதயன் பத்திரிகை தோன்றிய நாளை நினைவு கூர்ந்து எனது வாழ்த்துச் செய்தியை பூரிப்புடன் நல்கிறேன்.



ஈழத்தமிழரின் வாழ்வு பல இடர்பாடுகளைக் கொண்டது. பல அடக்கு முறைகளாலும், தொடருகின்ற போர்க்கால சூழலினாலும், அதன் விளைவாக இடம்பெயர்வுகள், மேலும் துன்பகரமான செயல்களினாலும், நெருக்கீடுகள் அதிகரித்து தனிநபருடைய மனவடு என்ற நிலைக்கு அப்பாற்பட்டு இன்று சமூகத்திற்கே பொதுவாக சமுதாய வடுவாகியுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தவும், அதனை இலகுவாகவும், எளியமுறையிலும், விரைவாகவும், செய்திகளை மக்களுக்கு வழங்குவதில் சோர்வடையாமல் பணிசெய்கின்றது உதயன் பத்திரிகை.

இத்தகைய பத்திரிகை சமுதாய வடுவிலிருந்தும் தொடர்ச்சியான சீரழிவை தடுக்கவும் தொடர்ந்து ஒளியாக திகழ வேண்டும் என்று ஆண்டவனை பிரார்த்திக்கின்றேன். உதயனை வாழ்த்துகின்றேன்.

அருள்திரு.எஸ்.கே.கதிர்காமம்
முகாமைக்குரு.
மெதடிஸ்த திருச்சபை,
யாழ் சேகரம்.

## ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக ஒலிப்பவன் உதயன்



ஒடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் எம் மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் 'உதயன்' 22 ஆவது ஆண்டை நிறைவு செய்து 23 ஆவது ஆண்டிற்குள் காலடி எடுத்துவைப்பதையிட்டு நாமெல்லோரும் மகிழ்ச்சி அடைவதுடன், அது குறித்து வாழ்த்துக்களையும் ஆசியையும் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மிகவும் துன்பகரமான காலகட்டத்தில் உதயமாகி தன்பணியை பக்கச்சார்பிலாது நீதி, துணிவு என்ற சிறப்பம்சங்களை இலட்சியமாகக் கொண்டு நேரகாலம் தவறாது நமது கரங்களில் தவழச்செய்யும் உதயன் நிறுவனத்தினர் பாராட்டுவதற்குரியவர்கள்.

குறிப்பாக கடும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் தியாகத்தோடும் அர்ப் பணிப்போடும் உதயன் வெளிவருவது போற்றுவதற்குரியதும் ஈழத்தமிழர் வரலாற்றில் உதயனுக்கு ஒரு முக்கிய இடமுண்டு.

மக்களுக்கு அதிசிறந்த உணர்வுகளைத் தரும் பொக்கிஷமாக வளரும் உதயனின் சேவை தினமும் தொடர எல்லாம்வல்ல வல்வை நகரின் காவல் தெய்வமாக விளங்குகின்ற அன்னை ஆதி பராசக்தியை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன். நிர்வாகத்தினர், பிரதம ஆசிரியர், பணியாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோபவந்து" வாழ்க வளமுடன்.

''சிவகம சித்தாந்த ஞான தேசிகபானு'' பிரதிஷ்டாலங்கார சித்தாந்த ஸாகரம்''
''பிரதிஷ்டா சிரோமணி''
சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் (J.P)
*(பிரதமகுரு, வல்வை ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானம், சிவாச்சார்ய பீடாதிபதி, அகில உலக சைவக்குமார் சம்மேளனம்).*

## இலட்சியப் பயணத்தைத் தொடர்க!

உதயன் தனது இருபத்திரண்டு வருட கால சேவையை நிறைவு செய்து இருபத்து மூன்றாவது அகவையில் காலடி



எடுத்து வைக்கின்றது. கடந்தகாலத்தில் இலங்கை வாழ் தமிழ்மக்கள் சந்தித்த துன்பங்கள், ஏமாற்றங்கள் இழப்புக்கள் ஏராளம்! ஏராளம்!! இக்காலகட்டத்தில் தமிழ்மக்களின் அவலங்களைப் பற்றி எடுத்துக் கூற ஒரு சிலரே முன்வந்தனர். உதயன் இந்த இருண்ட காலத்தில் தமிழ் மக்களின் கண்ணீரையும் மனக்குமுறல்களையும் தெட்டத்தெளிவாக எடுத்துக்கூறியது, பதிவுசெய்தது, ஆறுதல் கூறியது, நம்பிக்கையூட்டியது. இதற்காக உதயன் அதிக விலைகொடுக்க வேண்டியதாயிற்று.

உதயன் சோர்ந்து போகாமல் தனது இலட்சியப் பயணத்தைத் தொடரவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

பேராயர் எஸ்.ஜெபநேசன்
*முன்னாள் அத்தியட்சகர், தென்னிந்திய திருச்சபை.*

## ஒரு மூத்த பத்திரிகையாளனின் பார்வையில் உதயன்...

### உதயனும் இதழியல் நவீனத்துவமும்



இதழியல் நவீனத்துவத்துக்குள் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள இலங்கையின் முதற் தமிழ்த் தினசரி உதயன்.

பிரதேசத் தினசரியாக வெளிவருகின்ற போதிலும் உதயனின் செய்தி அணுகுமுறை தேசியத் தன்மை பெற்றதாகத் திகழ்கின்றது.

'சுதந்திரன்' பத்திரிகைக்குப் பின் அரசியல் நெருக்கடிக்குள் ஈடுபடுத்தப்பெற்ற தமிழ் ஏடு 'உதயன்'.

பத்திரிகையில் பிரசுரமாகும் ஒரு செய்தியின் பலம் இதழியலாளனின் அவதானிப்பிலும் தெளிவுபடுத்தலிலுமே தங்கி உள்ளது.

சுருங்கக்கூறி விளங்கவைக்கும் தமிழியல்பாங்கு உதயனின் நிலைத்த பாணியாக அமைந்துள்ளது.

அளவான சொற்களால் அதிகமான சம்பவங்களைத் தரவிரும்பும் இதழியலாளன் [illegible] ஒரு செய்தியினைத் தெரியப்படுத்துவதற்கு ஒரு சொல் போதுமெனில் இரண்டு சொற்களைப் பயன்படுத்துவது இதழியலாளனின் ஒரு தேவையற்ற செயலாகும்.

உதயன் பத்திரிகையின் செய்திகளை நெருக்கமாக அவதானிக்கும் காலை மேற்சொன்ன கூற்றுக்கள் மிளிர்வதைக் காணலாம்.

செய்தி ஒன்று ஆச்சரியப்படத்தக்கதாக வாசகரிடம் சென்றடைவதற்கு சொற்களை விட சம்பவங்களே ஏதுவாக இருத்தல் வேண்டும். வாசகர்களின் உள்ளங்களைச் செய்தியின் மூலம் ஈர்ப்பதும் அந்த உள்ளங்களோடு நெருங்கிய உறவை (Proximity) செய்தியின் மூலம் ஏற்படுத்திக் கொள்வதும் ஓர் இதழின் நோக்கமாக அமைதல் வேண்டும்.

இந்த நவீனத்துவ நோக்குகளை முழுமையாக உள்வாங்கிக் கொண்ட இதழியல் சித்தாந்தம் உதயன் பத்திரிகையின் நீரோட்டம்.

இருபத்து மூன்றாவது அகவையுள் நுழையும் உதயன், இதழியல் நவீனத்துவ கோட்பாடுகளை முழுமையாக உள்வாங்கி துடிப்புடனும் சிறப்புடனும் திகழ வேண்டுகின்றேன்.

- இ.சங்கர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தம்பிமுத்து கந்தப்பிள்ளை**

தோற்றம்: 15 ✱ 05 ✱ 1914

மறைவு: 07 ✱ 12 ✱ 2006

திதி:
அபரபக்கத் திருதியை
27.11.2007

*ஐயா,*
*அவனியிலே நாமுயர வழிகள் செய்து*
*அல்லலின்றி நாம் வாழ வளங்கள் சேர்த்து*
*தாயும் தந்தையுமாய் அரவணைத்த அன்புத் தெய்வமே!*
*ஆண்டொன்று ஆனாலும் ஆறாது எம் துயரம்.*

594, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (68289)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவுகளுடன்

அன்னை மடியில் 05 03 1934

இறைவன் அடியில் 08 12 2006



திருமதி
**ரேவதியம்மா கனகரத்தினம்**

திதி: சதுர்த்தசி 27.11.2007

அன்புள்ள அம்மாவுக்கு,
குளிர்ச்சியான தென்றலில்
கேட்பதும் உங்கள் குரலே!
வான வில்லின் நிறங்களில் தெரிவதும் நீங்களே!
பிரகாசிக்கும் கதிரவனின் கதகதப்பில்
உணர்வதும் உங்கள் அரவணைப்பே!
நாங்கள் பறிக்கும் மலர்களின்
நறுமணமும் நீங்களே!
எங்களைத் தாலாட்டி உறங்கச் செய்யும்
மழலை ஓசையும் நீங்களே!
எங்கள் சிரிப்பினுள்ளே வாழ்வதும் நீங்களே!
எங்கள் ஒவ்வொரு கண்ணீர்த் துளியிலும்
உறைந்திருப்பவரும் நீங்களே!
எங்கள் சுவாசக் காற்றில் கலந்திருப்பவரும் நீங்களே!
இறைவன் எமக்களித்த மிகப் பெரிய
அன்பளிப்பு எங்கள் அன்னையே!

*மண்ணுக்குள் சென்றாலும் கண்ணுக்குள் வாழும்*
*உங்கள் நினைவலைகளைச் சுமந்து நிற்கும்:*
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
ஐயனார் கோயிலடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (68280)

## தவறிவிட்டது

24.11.2007 அன்று பொக்கணைச் சந்திக்கும் உடுப்பிட்டி வாசிகசாலைக்கும் இடையில் 3லட்சம் பெறுமதியான நகை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் *சின்னத்தம்பி ஞானப்பிரகாசம், பழைய விதானையார் கேற்றடி, உடுப்பிட்டி வீதி, தொண்டைமானாறு* என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி/54484)

பத்மநிதி கொமினிக்கேஷன் T.P.: 0602212516

## ஒத்துமாறல்

தென்மராட்சிக் கல்வி வலயத்திலுள்ள பாடசாலையொன்றில் ஆசிரிய நூலகராகக் கடமையாற்றும் ஒருவர் வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலையொன்றில் ஆசிரிய நூலகராகக் கடமையாற்றும் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார். உடன் தொடர்புகொள்ளவும்.

*தொ.பே.இல.* 077 6702526, 021 222 9178

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 29.11.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

**றாஜீவ்**
*நவாலி வீதி, ஆனைக்கோட்டை.* (68158)

## டுபாயில் வெற்றிடங்கள்
## யூ. ஏ. ஈ.- எம். பி. எம். கம்பனி

(உடனடிப் பயணம்)

| இல | தொழில் | தேவையானோர் | சம்பளம் |
|---|---|---|---|
| 01 | ஆண் சுத்திகரிப்பாளர் | 350 | டினார் 450/- |
| 02 | பெண் சுத்திகரிப்பாளர் | 400 | டினார் 500/- |

**விதிகளும் நிபந்தனைகளும்**

இரண்டு வருட ஒப்பந்தம், வேலை நேரங்கள், நாளொன்றுக்கு எட்ட(8) மணித்தியாலங்கள், வாரமொன்றுக்கு 6 நாட்கள், இலவச தங்குமிடம், இலவச மருத்துவம், மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்தன் பின்னர் தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

வயதெல்லை 18-45 அனுபவமுள்ளவர்கள் / பயிலுனர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க்காணப்படும் முகவரிக்கு வரவும்.
3 வாரங்களுக்குள் பயணம்.
நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது
மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 7.00 மணிவரை
(ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

*உப முகவர்களும் விண்ணப்பிக்கலாம்

அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட்
375, முதலாம் மாடி, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை
(டுப்பிளிக்கேஷன் றோட்) கொழும்பு - 03.
தொலைபேசி :-2370653, 2502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இல. ஏஎல்/960/விளம்பரம்/03,05/07

மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்புகொள்ளவும்.

துவரகா இலத்திரனியல் - 22 கே.கே.எஸ். வீதி சுன்னாகம்.
தொலைபேசி : 011 2514003

## வலுவிழந்தோருக்குக் கொடுப்பனவு

வலி.தென்மேற்கு,நவ.27

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் சமூக சேவைகள், சமூக நலன்புரி அமைச்சு வாழ்வாதாரக் கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் வலுவிழந்தவர்களுக்கு மாதாந்தம் மூவாயிரம் ரூபா வழங்கி வருகிறது. முதற்கட்டமாக ஐந்து பேருக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. இக்கொடுப்பனவைப் பெறுவதற்கு மேலும் 27 வலுவிழந்தவர்களின் பெயர்ப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-135)

## வாழ்த்துகின்றோம்



*தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2007இல் 162 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த*
யா/இந்து கொக்குவில் ஆரம்பப் பாடசாலை
*மாணவி*
செல்வி பாலகுமாரன் மதுஷாயனி
*அவர்களை கனடாவில் இருக்கும் அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், அத்தை, மாமா, சுவிஸிலிருக்கும் பெரியமாமா, மாமி, சுமதி சித்தி, சித்தப்பா, கொழும்பிலிருக்கும் சின்ன மாமா, சாந்தி அன்ரி மற்றும் அப்பா, அம்மா, அண்ணா, அக்காமார், தம்பி எல்லோரும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

வாழ்த்துத் தகவல்:
(68308) **ப.தயாளன்** *(மாமா - கொழும்பு).*

## திருமண CAR வாடகைக்கு



✱ திருமண வைபவங்களுக்கான A/C கார்கள் (ஆங்கில இல), டொல்பின் வான் மற்றும் மினிபஸ் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
✱ சுற்றுலா, விசேட வைபவங்களுக்கு A/C கார் விசேட கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

*தொடர்பு :* **ரட்ணம்,**
22, சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கும் சென்.ஜோன்பொஸ்கோ வித்தியாலயத்திற்கும் இடையில்).
T.P.: 0777- 903090, 0777- 246117 (67059)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி
**தியாகராசா கனகம்மா**



உறவுகள் மகிழ 05 ✱ 06 ✱ 1934

உறவுகள் நெகிழ 28 ✱ 10 ✱ 2007

**ஆசை மனைவியாய் பாசமிகு தாயாய்**
**அருமைமிகு மாமியாய் பாசங்கொட்டும்**
**பாட்டியாய் உயிர் உள்ளவரை எல்லோருக்கும்**
**நல்லவராய் உறவாடிய உங்கள் அன்பு**
**நாள்களை நினைவில் ஏந்தும்.**

28.10.2007 அன்று எமது குடும்பத் தலைவி மறைவுச் செய்தி அறிந்து தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றிகளைத் தெரிவிப்பதோடு 29/6, சனல் வீதி, திருகோணமலையில் இன்று (27.11.2007) செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*மெமோறியல் லேன், மானிப்பாய்.* (68300)

**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சம்பந்திகள்.**

## ஆறாம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்





**சோதிராஜா நிசாந்தன்**
படைப்பு 25.09.1980 அழிப்பு 04.06.2007

**சோதிராஜா சுதர்சன்**
படைப்பு 15.11.1986 அழிப்பு 04.06.2007

எங்கள் அன்புச் செல்வங்களே,

கல்வியில் சிறந்தீர்கள். கனவுகள் பல நாம் கண்டோம். விதியின் சதியால் வீணாகியது உங்கள் வாழ்வு. யாராலும் அணைக்கட்ட முடியாத கரைபுரண்டோடும் கண்ணீரில் தவிக்கவிட்டு, தாங்கமுடியாத வேதனை என்னும் வெந்தீயில் துடிக்கவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டீர்கள். தெருவிலே குருதி சிந்தி ஈருயிரும் ஓருயிராய் வாழ்விலும் சாவிலும் சங்கமித்து சகோதர பாசத்திற்கு இலக்கணம் வகுத்துவிட்டீர்கள்.

காலமெல்லாம் எங்கள் நெஞ்சங்களில் நிறைந்து வாழும் உங்களை அரவணைத்து உறக்கமின்றி, நாவறண்டு, குரல் அடைத்து நடைப்பிணங்களாகத் திரியும் எங்களுக்கு இன்னமும் ஒரு நிழல்கூட கிடைக்கவில்லையே என்று மௌனமாக அலறுவது விழிகளை இறுகமூடிக் கொண்ட உங்கள் செவிகளில் கேட்கவில்லையா?


என்றும் மாறாத அன்பு, பாசத்தோடும், ஆறாத, யாராலும் ஆற்றமுடியாத துயரத்துடனும், ஆறாக ஓடும் எங்கள் கண்ணீரினால் ஆறாம் மாத திதியில் உங்கள் பாதக் கமலங்களைக் கழுவி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் செல்வங்களின் ஆறாம் மாதத் திதி, கிரியைகள் நேற்று 26.11.2007 வில்லூன்றித் தீர்த்தக்கரையில் நடைபெற்றன. இன்று (27.11.2007) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.* (68286) **குடும்பத்தினர்**

## நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு




மலர்வு 10 ✱ 05 ✱ 1959 — உதிர்வு 07 ✱ 12 ✱ 2006

**அமரர் சிவசாமி ரஞ்சன்**
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)
திதி: 27.11.2007

எம் குடும்பத்தின் குலவிளக்கே தெய்வமே!
எம் இதயமதில் விடிவு தந்த விடிவெள்ளியே!
உன்னுடன் வாழ்ந்தவள் பரதவிக்கின்றாள்
நீ பெற்ற பிள்ளைகள் சிறகிழந்தனர்
ஏனிந்த வேதனை யார் செய்த சோதனை
ஏதும் அறியோம் தேடுகின்றோம் குலவிளக்கே!
வாசலைப் பார்த்து கண்ணீருடன்
காத்திருக்கும் உன் பிஞ்சு மழலைகள்
பதில் சொல்வாய் தெய்வமே!
[illegible]ணைப்பார் உன்னைப் போல்.

*10/5, செம்மணி வீதி, நல்லூர்.*

15ஆம் நாள்



மலர்வு 12 ✱ 03 ✱ 1965 — உதிர்வு 12 ✱ 11 ✱ 2007

**அமரர் கந்தசாமி ஸ்ரீரஞ்சநாதன்**

மறைந்தாய் நீ
மண்ணோடு மண்ணாகினாய்
மண்ணில் உள்ளவர்கள்
மாளும் வரை
வேதனையைத் தந்தாய்
வரவைப் பார்த்து
சின்னஞ் சிறு நெஞ்சம்
பரிதவிக்கின்றோம்.

*மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.* (68291)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பளை, பருத்தித்துறை, கொடிகாமம் கடைசி பஸ்கள் 5.30 மணிக்குப் புறப்படும்

## வடபிராந்திய போக்குவரத்துச்சபை முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், நவ.27

யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கடைசி பஸ்சேவைகளின் நேரத்தில் நீடிப்புச் செய்யப்பட்டுள்ளதாக அதன் செயலாற்று முகாமையாளர் செ.கமலநாதன் அறிவித்துள்ளார்.

யாழ்.நகரத்துக்கு வந்து செல்லும் பொது மக்கள், அரச ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோரின் நலனைக் கருத்திற்கொண்டே இந்த நேரமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், நாளை புதன்கிழமை முதல் இது நடைமுறைக்கு வரும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்படி யாழ்.- பருத்தித்துறை (750), யாழ்.- கொடிகாமம் (769), யாழ்.- தெல்லிப்பளை (769) ஆகிய இலக்கப்பாதைகளில் சேவையில் ஈடுபடும் கடைசி பஸ்கள் மாலை 5.30 மணிக்கு யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்து புறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இலக்க பஸ் சேவைகள் தவிர்ந்த ஏனைய இலக்கப் பாதைகளுக்கான கடைசி பஸ்கள் மாலை 5 மணிக்கு யாழ்.மத்திய பஸ்நிலையத்தில் இருந்து புறப்படும் எனவும் செயற்பாட்டு முகாமையாளர் அறிவித்துள்ளார். (50)

## ஒளிவிழா

பருத்தித்துறை, நவ.27

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் கிறிஸ்தவ மாணவ ஒன்றியத்தின் ஒளிவிழா மாணவர் ஒன்றியத் தலைவி செல்வி எம்.தர்ஷிகா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இவ் விழாவிற்கு இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் கட்டைவேலி நெல்லியடி முகாமைக்குரு அருட் திரு.எ.அழகராஜா அடிகளார், பருத்தித்துறை பங்குத்தந்தை அருட் திரு.பயஸ் இருதயதாஸ் அடிகளார் ஆகியோர் ஆசி வழங்கினர். அதிபர் திருமதி எஸ்.சுரேந்திரன் உரையாற்றினார். (203-218)

## வேலாயுதம் வித்தியாலய பரிசளிப்பு விழா

பருத்தித்துறை, நவ.27

புலோலி வேலாயுதம் மகாவித்தியாலய நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் வித்தியாலய புதிய மண்டபத்தில் அதிபர் ஏ.ஜெகநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றன.

1895ஆம் ஆண்டு இவ்வித்தியாலயம் புலோலி வைரமுத்து வேலாயுதபிள்ளையினால் இந்துசமய மறுமலர்ச்சிக்காக ஆரம்பிக்கப்பட்டு கல்விப்பணியாற்றி வருகின்றது.

இவ்வித்தியாலய நிறுவுநர் நினைவுப் பேருரையை வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவர், சட்டத்தரணி சபா.ரவீந்திரன் நிகழ்த்தினார். விழாவிலே பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசன் கலந்துகொண்டார். மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கலையடுத்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (203-218)

## டாக்டர்கள் பற்றாக்குறையிலும் சிறப்பான சேவை

வலி.தென்மேற்கு, நவ.27

யாழ்.போதனாவைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பிரிவு 'கிளினிக்' கில் டாக்டர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகின்ற போதிலும் கடமையில் இருக்கும் டாக்டர்கள் அனைத்து நோயாளர்களையும் வைத்திய பரிசோதனை மேற்கொண்டு சிகிச்சைகளை வழங்கி வருகின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் வியாழக்கிழமைகளில் நடைபெற்று வரும் சத்திரசிகிச்சை ''கிளினிக்'' இல் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் எண்ணிக்கை மிகவும் அதிகரித்துள்ளது.

அதிகாலை முதலே நோயாளர்கள் சிகிச்சை பெற பல்வேறு தூர இடங்களிலுமிருந்து இக் கிளினிக்குக்கு வருகை தருகின்றனர். ஊழியர்களால் இலக்கத்துண்டு வழங்கப்பட்டு நோயாளர்கள் வாங்குகளில் இலக்க ஒழுங்கின் பிரகாரம் அமரவைக்கப்படுகின்றனர். கடந்த வியாழக்கிழமையன்று நடைபெற்ற சத்திர சிகிச்சைக் கிளினிக்குக்கு சுமார் 300 இற்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைபெற வந்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் டாக்டர்கள் நோயாளர்களுக்கு சிகிச்சைகளை சிறந்த முறையில் வழங்கிவருவதாக நோயாளர்கள் தெரிவித்துள்ளனர். (203-135)

## ஊர்காவற்றுறை மக்களுக்கு சுயதொழில் உதவிகள்

நல்லூர், நவ.27

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பகுதியில் வதியும் ஐம்பது வறிய குடும்பங்களுக்கு ஆடுகள் வளர்ப்பதற்கென ஐ.நா. அபிவிருத்தித்திட்டத்தில் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

ஆடுவளர்ப்புக்கென குடும்பம் ஒன்றிற்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. இதற்கென ஐ.நா.அபிவிருத்தி நிறுவனம் 12 லட்சத்து 95 ஆயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

யாழ்.கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம் ஆடுவளர்ப்புக்கான உபகரணங்களை வழங்கவுள்ளது. ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் நேரடி மேற்பார்வையில் செயற்படுத்தப்படும் ஆடு வளர்ப்புத் திட்டத்திற்கான தொழில்நுட்ப ஆலோசனைகளை மிருக வைத்தியப் பகுதி வழங்கவுள்ளது.

அத்துடன் கோழிவளர்ப்புக்கென ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட வறுமைநிலையில் உள்ள 90 குடும்பங்களில் முதல் ஐம்பது குடும்பங்களுக்கு இதற்கான மானிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தெரிவான அனைத்துக் குடும்பத்திற்கும் கோழிக்கூடு மற்றும் கோழிக்குஞ்சுகள் என்பவற்றுடன் மானிய உதவியாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தற்சமயம் மானிய உதவிகள் வழங்கப்பட்ட குடும்பங்கள் தவிர்ந்த மிகுதி 40 குடும்பங்களுக்கும் இன்னும் சில தினங்களில் இதற்கான உதவித் தொகை வழங்கப்படவுள்ளது. (203-111)

## நெடுந்தீவிலிருந்து யாழ்.நகருக்கு மீன்; அங்குள்ள மக்களுக்கு கிடைப்பதில்லை!

நல்லூர், நவ.27

நெடுந்தீவில் இருந்து விற்பனைக்கென பெருமளவான மீன்கள் யாழ்.நகரப் பகுதிக்கு எடுத்துவரப்படுகின்ற போதிலும் அங்குள்ள மக்கள் தமக்குத் தேவையான மீன் வகைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவில் ஒருகிலோ மீன் 100 ரூபா வரை விற்பனை செய்யப்படும் நிலையில் யாழ்.நகரில் 70 ரூபா தொடக்கம் 80 ரூபாவுக்கு அங்கிருந்து கொண்டு வரும் மீன்களைக் கொடுத்துச் செல்கின்றனர் என்று கூறப்படுகிறது.

உள்ளூரின் மீன்களை விற்பனை செய்யாது போக்குவரத்துக் கூலி கொடுத்து யாழ். நகருக்குச் சென்று குறைந்த விலையில் விற்பனை செய்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்ட பின்னரே வெளியிடங்களுக்கு மீன்களை எடுத்துச் செல்வதற்கேற்றவாறு உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (230-111)



தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் உலக தரிசன நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதி, விஞ்ஞான ஆய்வுகூடம் என்பன அடங்கிய மாடிக்கட்டடத்திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட நிறுவனத்தின் மனிதநேய அவசரகால நடவடிக்கை முகாமைத்துவ இயக்குநர் ஜி.டி.நைல்ஸ் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் அதிபர் கே.கே.யோகநாதன் நிற்பதை முதலாவது படத்திலும், வகுப்பறைக் கட்டடத்தை உலக தரிசன நிறுவனத்தின் அதிகாரி மைக் விக்கின், வித்தியாலய முன்னாள் அதிபர் அமரர் கணபதிப்பிள்ளையின் புதல்வி திருமதி மதிவதனி செல்லக்குமார் ஆகியோர் நாடாவெட்டித் திறந்து வைப்பதை இரண்டாவது

## பட்டப்பகலில் சூறை; சந்தேக நபருக்கு விளக்கமறியல்

பருத்தித்துறை, நவ.27

பருத்தித்துறையில் பட்டப்பகலில் வீட்டுக்காரப் பெண்மணி தனித்திருந்தபோது தங்க நகைகளையும் ரொக்கப்பணத்தையும் சூறையாடியவர் என்று சந்தேகிக்கப்படும் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சம்பவதினம், பருத்தித்துறை, 3 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வீடொன்றில் முற்பகல் 10 மணியளவில் திருடன் புகுந்துள்ளான். அங்கிருந்து 50 ஆயிரம் ரூபா பணம் மற்றும் தங்கச்சங்கிலி என்பவற்றைத் திருடிக்கொண்டு முகத்தைக் கறுப்புத்துணியால் கட்டிக்கொண்டு ஓடி மறைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்திருடன் தொடர்பாகப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது அவர்களுக்குக் கிடைத்த தகவல்களை அடுத்து சந்தேகநபரைக் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் நீதிபதி கே. அரியநாயகம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபரை டிசெம்பர் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (1-218)

## சிவபூமி முதியோர் இல்லத்திற்கு மேலும் ஒரு கட்டடம்

சுழிபுரம், நவ.27

சிவபூமி முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியோர் நோய்வாய்ப்பட்டால் அவர்களைத் தனியாக வைத்துப் பராமரிப்பதற்கென கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கென மகாஜனக் கல்லூரியின் பழையமாணவர் ஒருவர் மூன்று லட்சம் ரூபா நிதியை சிவபூமி நிர்வாகத்திடம் வழங்கியுள்ளார்.

தொல்புரம் சிவபூமி முதியோர் இல்ல வளாகத்திலேயே இதற்கான கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (203- 28)

## ஊர்காவற்றுறையில் 102 ஏக்கரில் நெல் உற்பத்தி

நல்லூர், நவ.27

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இம்முறை 102 ஏக்கர் நிலத்தில் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

அனலைதீவு, நாரந்தனைப்பகுதிகள் உட்பட நெற்செய்கை செய்யப்படும் பகுதிகளில் விவசாயிகளுக்குத் தேவையான விவசாய உள்ளீடுகளை கமநல சேவை நிலையம் வழங்கி வருகின்றது.

பயிர் செய்யப்பட்டுள்ள வயல் நிலங்களைச் சுற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் முள்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. (203-111)

## வீதிகள் சேதம்; கவனிப்பார் யாருமில்லை!

கட்டைவேலி, நவ.27

அல்வாய்கிழக்கு, தெருமூடி, மடத்தடி தம்பசிட்டி வீதியில் தெருமூடி மடத்தடிக்கு அண்மையில் வீதியின் நடுவே மழை காலங்களில் வெள்ளம் தேங்குவதால் அந்த வீதியால் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் கரவெட்டியில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் மக்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட அனைவரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வீதியின் குறிப்பிட்ட பகுதி பள்ளமாகக் காணப்படுவதனாலேயே வெள்ளம் தேங்கி நிற்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே உரியவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரியுள்ளனர். (203- 275)

* * *

உடுப்பிட்டி, நவ.27

நெல்லியடி மகாத்மாவீதி தற்போது பெய்துவரும் மழையால் போக்குவரத்துச் செய்ய முடியாது சேறும் சகதியுமாக உள்ள தாகக் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாகவும், எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாகவும் வீதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளதால் போக்குவரத்து நெருக்கடிகள் நிலவுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (203-155)

* * *

நவாலி,நவ.27

நவாலி, சின்னப்பா வீதி, சங்கையான் வீதி ஆகியவற்றில் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை தோன்றியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது பெய்துவரும் மழையை அடுத்து இந்த வீதிகளில் வெள்ளம் ஓடாது தேங்கி நிற்பதால் மாணவர்கள் உட்பட அனைவரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இவ்விடயம் தொடர்பாக உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (203-100)


டெங்குக் காய்ச்சல்

உலகளாவிய ரீதியில் 100 இற்கு மேற்பட்ட வெப்பவலய நாடுகளில் டெங்குக் காய்ச்சல் பாரிய சுகநலப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பிரதானமாக தென்கிழக்காசியா, மத்திய மற்றும் தென்னமரிக்கா, ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற பிரதேசங்களில் இந்த நோயின் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. 1970 தொடக்கம் 1995 வரையான காலப்பகுதியினுள் இந்த நோயின் தாக்கம் உலகளாவிய ரீதியில் நான்கு மடங்காக அதிகரித்துள்ளது. வருடந்தோறும் உலகில் 20 மில்லியன்- 100 மில்லியன் பேர் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றார்கள். அண்ணளவாக 24000 பேர் இந்த நோயினால் இறக்கின்றார்கள்.

சுகாதாரத் திணைக்களம்

care

Disasters Emergency Committee

(கு/54392)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org






BOC இலங்கை வங்கி

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

*யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் 31.08.2006 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் 28.02.2007 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.*

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக்கிளை<br>யாழ். 2 ஆம் மேற்தரக்கிளை<br>திருநெல்வேலி<br>ஊர்காவற்றுறை<br>காரைநகர்<br>மானிப்பாய்<br>சுன்னாகம்<br>(அச்சுவேலி<br>விரிவாக்கற் கிளை உட்பட)<br>காங்கேசன்துறை<br>நெல்லியடி<br>பருத்தித்துறை<br>சாவகச்சேரி | யாழ்.மேற்தரக்கிளை யாழ்ப்பாணம்<br>2007 டிசம்பர் மாதம்<br>8ஆம், 9ஆம் திகதிகளில்<br>காலை 9.30 மணிக்கு |


*இந்த ஏல விற்பனையை ஒள்றிணைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.*

**021 222 3126,**
**021 222 2735**

**26.11.2007**

**உதவிப் பொது முகாமையாளர்,**
*இலங்கை வங்கி (வட பிராந்தியம்),*
*உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயம்,*
*ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



## உயர்திரு. வி.எஸ்.சித்திரவடிவேல்
## (B.A., Hons Dip. in Edu., S.L.P.S. - I)

*அறிவில் உயர்ந்து*
*ஆற்றலில் சிறந்து*
*அனுபவத்தில் முதிர்ந்து - பதவியுயரும்*
*எங்கள் அதிபரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*
*எமது பாடசாலையில் கடந்த பதினொரு (11) வருடங்களாக அதிபராக சேவையாற்றி கோப்பாய் கல்விக் கோட்டக் கல்வி அதிகாரியாக 01.11.2007 அன்று பதவி உயர்வு பெற்றுச் சென்ற எங்கள் அதிபரின் கல்விப்பணி மேலும் தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

யா/இடைக்காடு மகாவித்தியாலயம்,
அச்சுவேலி. (68316)

**பழைய மாணவர் சங்கம்.**

# மரண அறிவித்தல்கள்

## *சின்னத்தம்பி பொன்னுத்துரை*



கோண்டாவில் மேற்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னுத்துரை அவர்கள் 26.11.2007 திங்கட்கிழமை காலை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சுமி தம்பதியரின் மகனும் காலஞ் சென்ற இராசமணியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான கந்தையா, நாகம்மா, சிவக் கொழுந்து ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - தங்கம் தம்பதியரின் மருமகனும் மகாலக்ஷ்மி (கனடா), வியேந்திரன் (டென்மார்க்), கலாவதி, சிவபாக்கியவதி (கனடா), புஸ்பதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ் சென்ற இராஜதுரை, இராஜேஸ்வரி (டென்மார்க்), புவனேந்திரன், துரைராஜா (கனடா), வரதராஜா (மெக்கானிக்) ஆகியோரின் அன்பு மாமனும் தயாறூபி (கனடா), முருகதாஸ் (கனடா), இராஜரூபன் (கனடா), பவானி (கனடா), லதாறூபி (கனடா), தவராஜா (கனடா), இதயறூபி (கனடா), மகேஸ்வரன் (கனடா), விஜித்தா (டென்மார்க்), றமேஸ் (டென்மார்க்), காலஞ்சென்ற சதீஸ்பாபு, சகிலன், கௌசலியா (கனடா), றமேஸ் (கனடா), அகல்யா (கனடா), கீதாகரன் (கனடா), துஷிகரன் (மாணவன் - ஜோன் பொஸ்கோ) ஆகியோரின் பேரனும் அபிராம் (கனடா), இராஜ லக்ஷன் (கனடா), தாருஜன் (கனடா), சாதகன் (டென்மார்க்), மானஸி (டென்மார்க்), பபிஸா (கனடா), தீபனா (கனடா), பிரணவி (கனடா), அஞ்சலி (கனடா), பிரித்திகா (கனடா) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2007) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"றூபகிரி",
பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

தகவல்:
**து.வரதன் (மெக்கானிக்).**
T.P.: *0777 111145, 0779254039*

## *சின்னத்தம்பி முத்துப்பிள்ளை*



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முத்துப்பிள்ளை நேற்று (26.11.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் ஆவார்.

அவரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

M.S. *லேன்,*
*கோண்டாவில்.*

தகவல்:
**சின்னத்தம்பி** *(கணவர்).*

## தவறிவிட்டது

மீசாலையைச் சேர்ந்த ஜெயக்குமார் நிஷாலினி என்பவருடைய தே.அ.அ.இல. 915100260V யாழ் மையப்பகுதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் 121/A, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தொ.பே 222 6608 (68320)


## தேவை

தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய 35 வயதுக்கு மேற்பட்ட நம்பிக்கையான களஞ்சியப் பொறுப்பாளர் தேவை. கிராமசேவகர் அத்தாட்சிப்படுத்திய குண்நல சான்றிதழுடன் நேரில் சமூகமளிக்கவும்.

*சமூகமளிக்கும் நேரம்:* **காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**

**EURO FLIGH & CARGO (PVT) LTD**
NO. 22 ,WYMAN ROAD, JAFFNA.
TP NO: 0212223974
0774207963
(C/54486)


# மரண அறிவித்தல்

## செல்வரட்ணம் மேபிள் மங்கையற்கரசி



முதலாம் குறுக்கு தெரு இணுவில் வீதி மானிப்பாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வரட்ணம் மேபிள் மங்கையற்கரசி 25.11.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி யேக்கப் செல்வரட்ணத்தின் அன்பு மனைவியும் எஸ்.ஜே.செல்வராஜா, எஸ்.டி.மகிழ்ராஜா, எஸ்.யோகராஜா, எஸ்.ஏச்.சந்திரராஜா, எஸ்.டி.நேசராஜா காலஞ்சென்ற எஸ்.டபிள்யூ.ஜெயராஜா, எஸ்.ஏ.ஆனந்தராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.11.2007) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று மானிப்பாய், அமெரிக்கன் இலங்கை மிசன் கல்லறையில் நல்லடக்கம் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**எஸ்.ஜே.செல்வராஜா**

*முதலாம் குறுக்குத் தெரு,*
*இணுவில் வீதி,*
*மானிப்பாய்.*
(68319)

## வாழ்த்துகின்றோம்



*தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2007இல் 162 புள்ளிகளை பெற்று சித்தியடைந்த* யா/இந்து கொக்குவில் ஆரம்பப்பாடசாலை *மாணவி*

செல்வி பாலகுமாரன் மதுஷாயனி

*அவர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

பொ.சுந்தரம்பிள்ளை (ஈர்பா)
அளவெட்டி வடக்கு.

வாழ்த்துவோர்
அம்மப்பா, அம்மம்மா, மாமா, சித்தி, சித்தப்பா மற்றும் தமிஅவ்ரி எல்லோரும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
(68309)

## *யாழ்.மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கம்*
## சிற்றுண்டிச்சாலைக் குத்தகைக்கான
## கேள்வி அறிவித்தல் - 2008

யாழ். மாநகரசபை வளாகத்தில் பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்திருக்கும் மேற்படி சங்கத்திற்குச் சொந்தமான சிற்றுண்டிச்சாலைக் கட்டடமும், தளபாடங்களும், சமையல் பாத்திரங்களும் 01.01.2008 முதல் 31.12.2008 வரையான ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

அ) கேள்விப் படிவக் கட்டணம் ரூபா 300/- ஐயும், மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பிணைப்பணமாக ரூபா 1000/- ஐயும் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும் கேள்விப்படிவங்களில் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆ) வருடாந்தம் ஆகக்குறைந்த கேள்வித்தொகை ரூபா 75,000/- ஆகும்.

இ) கேள்விப் படிவங்கள் 12.12.2007ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிவரை விநியோகிக்கப்பட்டு 14.12.2007 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

ஈ) பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை சங்க அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் சேர்ப்பித்தல் வேண்டும்.

உ) கிடைக்கப்பெறும் கேள்விகள் 14.12.2007 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குத் திறக்கப்படும்.

ஊ) மேலதிக விவரங்களை யாழ்.மாநகரசபை அலுவலகத்திலுள்ள மேற்படி சங்கப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

**ச.தனபாலசிங்கம்**
செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பாகிஸ்தானுக்கு ஒரு நியாயம் இலங்கைக்கு வேறு நியாயமா?

உகண்டா தலைநகர் கம்பாலாவில் நடைபெற்று முடிந்த பொதுநல நாடுகள் அமைப்பின் உச்சி மாநாட்டைஒட்டி இலங்கை நடந்துகொண்ட குளறுபடித்தனம் கண்டு உலகமே கைகொட்டிச் சிரிக்கிறது.

அதேசமயம், பொதுநல அமைப்பு நாடுகள் ஒவ்வொரு தரப்புக்கு ஒவ்வொரு விதமாக - மாறுபாடான அணுகு முறையோடு - நடந்துகொண்டமையைப் பார்க்கும்போது அதுவும் கூட நையாண்டி நளினமாகத்தான் தோன்றுகின்றது என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

பொதுநல அமைப்பு நாடுகள் தமது கூட்டமைப்பின் உறுப்புரிமையிலிருந்து பாகிஸ்தானை இடைநிறுத்த எடுத்த முடிவையும் -

அந்த முடிவை ஆரம்பத்தில் ஆதரித்த இலங்கை பின்னர் அதைக் கடுமையாக எதிர்த்தமையையும் - எம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது.

ஆனால், ஜன நாயக விழுமியங்கள் பாதிக்கப்பட்டு, அவசரகாலச் சட்டத் தினால் அடிப்படை மனித உரிமைகள் மிதிக்கப்படும் நாடாக பாகிஸ்தான் மட்டுமே பொதுநல அமைப்பு நாடுகளின் கண்களுக்குப் பட்டது என்பதைத்தான் எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

பாகிஸ்தானை இடைநிறுத்தும் பொதுநல நாடுகள் அமைப்பின் தீர்மானத்தை இலங்கை எதிர்த்தமைக்குப் பிரதான காரணங்கள் இரண்டு.

ஒன்று - உள்நாட்டு யுத்தத்தில் அந்தரிக்கும் கொழும்புக்கு இராணுவ ஆயுதத் தளபாடங்கள் மற்றும் இராணுவச் சேவை, பயிற்சி உதவிகளை வழங்கிக் கைகொடுத்து வரும் முக்கிய நாடு பாகிஸ்தான்தான். ஆகவே, அந்த நாட்டுக்கு இயல்பாகவே கைகொடுக்க இலங்கை முன்வந்தமை ஆச்சரியப்படத்தக்கதல்ல. அத்துடன், பாகிஸ்தானை பொதுநல நாடுகள் அமைப்பிலிருந்து இடைநிறுத்தும் முடிவை இலங்கையும் ஆதரித்தது என்ற காரணத்துக்காக இலங்கை மீது பாகிஸ்தான் சீற்றம் கொண்டு, இலங்கைக்கான உதவிகளை நிறுத்தத் தீர்மானித்து, பாகிஸ்தான் இலங்கையைக் கைவிடுமானால் கொழும்பின் கதி அம்போதான். ஆகவே, எப்படியாவது பாகிஸ்தானை தாஜா பண்ணி, சமாளித்து, திருப்தி செய்து, தன்னுடன் அரவணைத்து வைத்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் கொழும்புக்கு உண்டு என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. இதற்காகத்தான் ஆரம்பத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம திசைமாறிச் செயற்பட்டபோதும், பின்னர் இலங்கை ஜனாதிபதி தாமே நேரடியாக இவ்விவகாரத்தில் தலையிட்டு பாகிஸ்தானுக்காகக் குரல் எழுப்பி, பாகிஸ்தானுடனான உறவைச் சமாளித்துக் கொண்டார்.

அடுத்தது - 'இனம் இனத்தையே சாரும்' என்ற காரணத்தில் அமைந்தது. அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, ஜனநாயக விழுமியங்களைக் குழி தோண்டிப் புதைத்தமைக்காக பாகிஸ்தான் மீது பொதுநல நாடுகள் அமைப்பு நடவடிக்கை எடுக்குமானால் - அந்தத் தொப்பி தனக்கும் அளவாக விழும் என்பதால் - அடுத்த இலக்குத் தானாகி விடலாமோ என்ற அச்சம் கொழும்புக்கு. அதனால்தான் இந்தக் குற்றச்சாட்டுக்காக பாகிஸ்தானைப் பொறுப்பாக நிறுத்தும் நடவடிக்கையிலிருந்து அந்த நாட்டை விடுவிக்கத் தலைகீழாக நின்றது கொழும்பு.

கடந்த இரண்டு, மூன்று வாரங்களில் பாகிஸ்தானில் நடந்தது என்ன? ஆக, அவசரகாலச் சட்டம் புதிதாகக் கொண்டுவரப்பட்ட விடயம்தான். அதன் கீழ் ஜனநாயகக் கட்சிகளின் ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். அவ்வளவே. அவசரகாலச் சட்டத்தின் கீழ் புதிதாகக் கொலைகளோ, கொடூரங்களோ அங்கு அரங்கேறவில்லை.

ஆனால், இலங்கையிலோ நிலைமை அதைவிட மோசம். இந்த அரசின் ஆட்சி, அவசரகாலச் சட்டம் என்ற தூணில்தான் நீண்ட காலமாகத் தொங்கிக் கொண்டு தொடர்கின்றது.

இந்த அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் -

ஆள்கள் கடத்தப்படுகின்றார்கள்; காணாமற்போகச் செய்யப்படுகின்றார்கள்; கடத்திக் கப்பம் அறவிடப்படுகின்றது; சட்ட விரோதக் கொலைகள் கணக்கு, வழக்கின்றித் தொடர்கின்றன. கைதுகளும், தடுத்து வைப்புகளும் எல்லை மீறி நடக்கின்றன. துணைப் படைகளின் அட்டகாசம் அளவு கடந்துள்ளது. பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. ஊடகங்களும், ஊடகவியலாளரும் கொடூரத் தாக்குதலுக்கு இலக்காகும் அவலம் நீடிக்கின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களோ அச்சுறுத்தப்பட்டு - அவர்களின் நாடாளுமன்றச் சுதந்திரம் பறிக்கப்படுகின்றது. குற்றமிழைக்கும் சீருடையினரை சட்டத்தின் கீழ் தண்டிக்க முடியாதவாறு விசேட சட்ட விலக்களிப்புக் கவசம் வழங்கப்பட்டிருக்கின்றது. பெரும் தொகைப் பணத்திற்கு அரசியல்வாதிகளை விலைக்கு வாங்கும் 'வர்த்தக அரசியல்' நாடாளுமன்றத்தில் கோலோச்சுகின்றது. மொத்தத்தில் இங்கு அவசரகால விதிகளின் கீழ் அராஜக ஆட்சி அரங்கேறுகின்றது.

இவற்றையெல்லாம் இங்கு கண்டுகொள்ளாத பொதுநல நாடுகள் அமைப்பின் கண்களுக்கு பாகிஸ்தான் அராஜகங்கள் மட்டுமே தோற்றுகின்றன.

இந்தச் 'சீத்துவத்தில்' பொதுநல அமைப்பு நாடுகளின் அடுத்த அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தை நடத்தும் வாய்ப்பு என்ற கௌரவத்தையும் கொழும்புக்கு வழங்க அந்த அமைப்பு முன்வந்திருக்கின்றதாம்!

ஒருபுறம் பாகிஸ்தான் மீது பாய்ந்துகொண்டு, மறுபுறம் இலங்கைக் கொடூரங்களைக் கண்டும் காணாதது போல பொறுப்பற்று இந்த அமைப்பு செயற்படுவது ஒரு கண்ணில் சுண்ணாம்பும், மறு கண்ணில் வெண்ணெய்யும் தடவுவதற்கு ஒப்பாகும். பொதுநல நாடுகள் அமைப்பு சகல நாடுகளின் விடயத்திலும் ஒரே நீதியைப் பின்பற்றுவதுதான் பொருத்தமாக இருக்கும்.

அப்படிப் பின்பற்றுமானால் பாகிஸ்தானுக்கு விதித்த உறுப்பினர் உரிமை இடைநிறுத்தம் என்ற நடவடிக்கையை அது இலங்கை மீதும் பிரயோகித்திருக்க வேண்டும். தவறி விட்டதே!

# குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு கப்பலில் அடுத்தவாரத்தில் இலவசப் பாட நூல்கள்

## நாடாளுமன்றில் கல்வி அமைச்சர் தகவல்

கொழும்பு,நவ.27

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களின் உபயோகத்திற்கென பாடப் புத்தகங்கள் அடங்கிய 30 ஆயிரம் புத்தகப் பொதிகள் அடுத்த வாரம் முதற் கட்டமாக கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

இது முதற்கட்ட நடவடிக்கையாகும். தொடர்ந்து தேவையான அனைத்துப் பாடப் புத்தகங்களையும் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று நாடாளுமன்றில் அறிவித்தார்.

நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்திலேயே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கல்வி நிர்வாக சேவைப் பதவிகளுக்கு போட்டிப் பரீட்சையின் மூலம் 475 பேரை நியமித்துள்ளோம். மேலும், 250 பேர் இதே அடிப்படையில் தெரிவு செய்யப்படவுள்ளனர். இத்தெரிவுகளிலும், நியமனங்களிலும் எந்தவிதமான அரசியல் தலையீடுகளுக்கும் இடமளிக்கப்படவில்லை.

கல்வி அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டவர்களை நாம் மாகாண சபைகளுக்கு அனுப்புகின்றோம். மாகாணக் கல்வி அமைச்சின் மூலமே தேவையான இடங்களுக்கு நியமனங்கள் செய்யப்படுகின்றன. அதில் ஏதாவது தவறுகள் ஏற்பட்டிருந்தால் அதற்கு மாகாண சபைகளே பொறுப்பேற்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின்போது அடிப்படைத் தகைமை இல்லாத 12 ஆயிரம் பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. இவர்கள் கடந்த 19 வருடங்களாகப் பணியாற்றியிருந்தும் நிரந்தர நியமனம் பெற முடியாமல் இருக்கின்றனர். இவர்களிடம் கல்வி பயின்ற மாணவர்கள்தான் எட்டுப் பாடங்களிலும் சித்தியடைய முடியாத நிலையில் இருக்கின்றனர்.

என்றாலும் கூட நாம் அவர்களை வீட்டிற்கு அனுப்பப் போவதில்லை. அவசியமான பயிற்சிகளை வழங்கி, நிரந்தர நியமனங்களை அவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

முதன்முறையாக பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு மலையகத்தைச் சேர்ந்த 3 ஆயிரத்து 179 தமிழ் இளைஞர், யுவதிகளுக்கும் 600 முஸ்லிம்களுக்கும் ஆசிரியர் நியமனங்களை வழங்கியுள்ளோம்.

ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் - 1971 முதல் 1994 வரை - அரசியல் பழிவாங்கல் என்ற போர்வையில் 9 ஆயிரம் பேருக்கு கல்வித் துறையில் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. இக்காலப் பகுதியிலேயே கல்வித்துறையில் அரசியல் தலையீடுகள் ஏற்பட்டன - என்றும் கல்வி அமைச்சர் கூறினார். (சி)

# நல்லூர் பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகள்

யாழ்ப்பாணம்,நவ.27

நல்லூர் பிரதேச பொதுமக்களுடன் கலந்துரையாடி எடுக்கப்பட்ட முடிவுகளின் படி நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அடையாளப்படுத்தப்பட்ட பல அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

திருநெல்வேலி வடக்கு பொது விவசாயக் கிணறுகள், பொதுச் சந்தைக் கால்வாய், வண்.வடமேற்கு கற்புலம் கிராம வாய்க்கால், கொக்குவில் பகுதியில் மத்தி கிழக்கு நவரட்ணராஜா வீதி மதகு, தென்மேற்கு காந்திஜி முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, பொற்பதி வீதி தடுப்புச் சுவர், மத்திய கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகிய அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (1-111)

# பல்கலை. கல்விச் செயற்பாடுகளுக்கு உதவுமாறு கேட்கிறது மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம்,நவ.27

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் பாதுகாப்பு ஊழியர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது. கல்விச் செயற்பாடுகள் சீராக இடம்பெற அனைத்துத் தரப்புகளும் உதவ வேண்டும்என்றுஒன்றியம்கோரியுள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இந்தச் சம்பவத்தை அதிர்ச்சி தோய்ந்த மனதுடன் கண்டிக்கின்றோம். தமது ஏகபுதல்வனை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

இச்சம்பவம் நடந்த விதமானது எமது பல்கலைக்கழக சமூகத்தினர் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. பயப்பீதியில் உறைந்து போயுள்ள எமது பல்கலைக்கழக சமூகத்தை பாதிக்கும் இத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறாவண்ணம் பார்த்துக் கொள்ள அனைத்துத் தரப்புகளும் முன்வரவேண்டும்.

பல்கலைக்கழக சமூகத்தின் பாதுகாப்பை கவனத்தில் கொள்ளாது ஆயுத நடவடிக்கைகளை மேற்கொள்வது அநாகரிகமான செயலாகும்.

கல்வி நடவடிக்கைகள் சீராக நடைபெறுவதுடன் முன்னேற்றகரமான நிலையும் எட்டப்படுவதாக நாம் நம்பிக்கை கொள்ளும் வேளையில், அதனைச் சீர்குலைக்கும் விதத்தில் எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளும் மாணவர்களைப் பாதிப்பதுடன் கவலையையும் அளிக்கின்றது.

எனவே சுமுகமான கல்விச் செயற்பாடுகளுக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-1)

# சகோதரியுடன் சென்றுகொண்டிருந்த இளைஞன் வல்வையில் சுட்டுக்கொலை!

வல்வெட்டித்துறை தெணியம்மை வீதியில் வைத்து நேற்றுக்காலை இளைஞர் ஒருவர் தமது சகோதரியுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தவேளை இனந் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கொம்மாந்துறையைச் சேர்ந்த சின்மயானந்தகுரு பரிமணன்(வயது 29) என்பவரே நேற்றுக்காலை 9.45 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டவர் ஆவார்.

நேற்றுமுன்தினம் அந்தப் பகுதியில் இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது கொலையுண்ட நபரின் அடையாள அட்டையைப் படையினர் வாங்கிச் சென்றனர் என்றும் -

நேற்றுக்காலை சகோதரியுடன் முகாமுக்கு சென்று அடையாள அட்டையை மீளப்பெற்றுக் கொண்டு வீடு திரும்பும் வழியில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அவர் சுடப்பட்டார் என்றும் - கூறப்பட்டது.

இளைஞனின் சடலம் வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-1)

# தம்பனையில் நிலக்கண்ணியில் 4 படையினர் காயம்

கொழும்பு,நவ.27

வவுனியா, தம்பனைப் பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டவை எனக் கூறப்படும் நிலக்கண்ணிவெடிகளில் சிக்கி 4 படையினர் காயமடைந்திருக்கின்றனர். படைத்தரப்புத் தகவல்கள் இதனை ஊர்ஜிதம் செய்தன.

அந்தப் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் காவலரண் ஒன்றின் மீது நேற்றுமுன்தினம் மாலை படையினர் தாக்குதல் நடத்தியதையடுத்து அவர்கள் அங்கு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோதே இவ்வாறு அவர்கள் நிலக்கண்ணியில் சிக்கினர் என்றும், இந்தத் தேடுதல் நடவடிக்கையில் விடுதலைப் புலிகளின் சில ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் போன்றவற்றை படையினர் மீட்டுள்ளனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டது.

இதேவேளை, வவுனியா, நாவற்குளம் வடக்குப் பகுதியில் நேற்றுக் காலை விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற இருவேறு மோதல் சம்பவங்களில் 3 விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர் என்று தேசியப் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் குறிப்பிட்டிருக்கிறது. (சி)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 12 | புதன்கிழமை 28.11.2007 |
| திதி :சதுர்த்தி | பி.ப. 01.20 |
| நட்சத்திரம் : | புனர்பூசம் முன்னிரவு 08.06 |
| [illegible] | [illegible] |
| ராகுகாலம் | [illegible] |

# புலிகளின் வாகனங்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்தும் வாகனங்கள் குண்டுத் தாக்குதல்களைத் தாக்குப் பிடிக்கக் கூடியனவாகத் தயாரித்துக்கொள்ளும் நோக்கத்தில், குண்டு துளைக்காத தகடுகளை பொருத்திக் கொள்வதற்கு ஜெனிபர் டேலர் நடவடிக்கை எடுத்துள்ளார். 2006 மார்ச்சில், இலங்கையிலுள்ள ஒரு நிறுவனத்தின் மூலமாக இந்த குண்டு துளைக்காத தகடுகளைப் பொருத்திக் கொள்ள ஜெனிபர் டேலர் நடவடிக்கை எடுத்துள்ளார். அதற்காக 'யுனிசெவ்' நிறுவனத்துக்குச் சொந்தமான 12,375 அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது.

ஆனாலும், ஆச்சரியம் தரக்கூடிய விடயம் என்னவென்றால் இந்தக் குண்டுத்துளைக்காத தகடுகள் 'யுனிசெவ்' நிறுவனத்துக்குச் சொந்தமான ஒரேயொரு வாகனத்துக்கே பொருத்தப்பட்டிருக்கிறது என்பதுதான். அது - WPHN - 9401 இலக்கம் கொண்ட 'லாண்ட் குறூசர்' வாகனம். அடுத்த கேள்வி என்னவென்றால், இவ்வளவு பெரிய தொகையைச் செலுத்தி மேற்படி தகடு இந்த ஒரு வாகனத்துக்கு மாத்திரம்தான் பொருத்தப்பட்டதா என்பதுதான். இந்தத் தகடுகள் பொருத்தப்பட்ட ஏனைய வாகனங்கள் 'யுனிசெவ்' நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனங்கள் இல்லையா? இந்த கொடுக்கல் - வாங்கல் தொடர்பாக ஐ.நா. அதிகாரிகள் விசாரணை நடத்தாமலிருப்பது அது அவர்களுக்குத் தெரியாமல் நடந்தது என்பதாலா?

மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக இலங்கைக்குப் படிப்பிப்பதற்கு தயாராகும் ஐ.நா. சபையின் கொழும்பு அதிகாரிகளின் செயல்கள் இவ்வாறு இருக்கும்போது, வெளிநாட்டமைச்சு மௌனம் சாதிப்பதன் காரணம் என்ன? இலங்கைச் சிறுவர்களின் நன்மைக்காக கிடைக்கும் பணம், புலிப் பயங்கரவாதிகளின் தேவைக்குப் பயன்படுத்துவது சர்வதேச சட்டத்துக்கு ஏற்ப கடுமையான குற்றம். அதனை நிரூபிப்பதற்கு நாங்கள் வெளிச்சத்துக்கு கொண்டு வந்த தகவல்கள் மாத்திரம் போதுமானவையாகும். ஆனால், பாகிஸ்தான் இலங்கையின் நண்பனா? எதிரியா என்பதைக் கூட அறிந்து கொள்ள முடியாமல் இருளில் தடுமாறும் வெளிவிவகார அமைச்சு தொடர்ந்தும், ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கின்றது.

ஆகவே, இப்போது செய்யவேண்டியது மத்திய வங்கி, வெளிவிவகார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றை ஒன்றிணைத்து விசாரணையொன்றை நடத்தி,இந்தப் புலிகள் சார்பு 'விளையாட்டை' உடனடியாக தடுத்து நிறுத்துவதற்குத் தேவையான உறுதியான தீர்மானங்களை எடுத்து, அதனைச் செயற்படுத்துவதுதான். ஆனால்,இது தொடர்பாக அவ்வாறாக இணைந்த தலையீடொன்று நடப்பதாக எமக்குத் தெரியவில்லை. - என்றார் அவர். (அ-சீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னியில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இடத்தில் முதலாவது மாவீரர் லெப். சங்கரின் திருவுருவப்படத்திற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியபோது எடுக்கப்பட்ட படம்.

# தானியங்கி விளையாட்டுக் ஹெலியால் வெல்லம்பிட்டிப் பகுதியில் பரபரப்பு

கொழும்பு,நவ.27

வெல்லம்பிட்டியப் பகுதியில் ஞாயிறு இரவு தானியங்கிக் கருவியில் இயங்கும் சிறியஹெலியால் பெரும்பரபரப்புஏற்பட்டது.

இந்த ஹெலி அன்று இரவு வெல்லம்பிட்டியவில் உள்ள வீடொன்றின் மீது தரையிறங்கியதாக அந்த வீட்டிலிருந்தோர் தெரிவித்துள்ளனர்.

சிறியபொருள் ஒன்று கூரையில் விழுந்து சத்தம் கேட்டது. அங்கே சென்று பார்த்தபோது இந்தச் சிறிய ஹெலி கிடந்தது என்று அந்த வீட்டிலிருந்தவர்கள் தெரிவித்தனர்.

இது குறித்து வீட்டிலிருந்தோர் வெல்லம்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுக் காலை தகவல் கொடுத்தனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் அந்தக் ஹெலியை பரிசோதனையின் பின்னர் எடுத்துச் சென்றனர்.

சுமார் ஒ்ன்றரை அடி நீளமான அந்தக் ஹெலி சிறுமி ஒருவரின் விளையாட்டுப் பொருள் என்று விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அதன் பின்னரே அப்பகுதியில் ஏற்பட்ட பரபரப்பு தணிந்தது. (அ)

# ஆழ ஊடுருவும் படையின் சிப்பாய் சுட்டுக்கொலை

கொழும்பு,நவ.27

ஆழ ஊடுருவித் தாக்குதல் நடத்துவதற்காக மன்னாரில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைந்த படைச் சிப்பாய் ஒருவரைத் தாங்கள் சுட்டுக்கொன்றிருக்கின்றனர் எனப் புலிகள் அறிவித்துள்ளனர்.

மன்னார், கட்டையடம்பன் பகுதியில் வைத்தே இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம் பெற்றிருக்கின்றது.

சம்பந்தப்பட்ட சிப்பாயின் சடலத்தையும், இரண்டு ரி - 56 ரகத் துப்பாக்கிகளையும் தாங்கள் கைப்பற்றியிருக்கின்றனர் என்றும் புலிகள் தெரிவித்தனர். (சி)

# வன்னி மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள 127 பாடசாலைகளையும் திறக்குக!

## சபையில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு,நவ.27

''யுத்த சூழ்நிலை காரணமாக வன்னி மாவட்டத்தில் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ள 127 தமிழ்ப்பாடசாலைகளையும் உடனடியாகத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்''

- இவ்வாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நேற்று நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

கல்வி உயர் கல்வி அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசின் யுத்த முனைப்புகளினால் வன்னி மாவட்ட மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒட்டுசுட்டான் பகுதியில் படையினரின் ஆழ ஊடுருவும் பிரிவின் கிளைமோர்த் தாக்குதலின் போது பொதுமகன் ஒருவரும் பாடசாலை மாணவர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

வன்னியில் நாளாந்தம் இடம்பெறும் விமானத் தாக்குதல்களினால் மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். மாணவர்கள் உளரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எமது பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள் கிடைப்பதில்லை. கல்வி அமைச்சர் கவனம் எடுத்து மாணவர்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை அனுப்பிவைக்க வேண்டும்.

### உண்மை வரலாறுகள் திரிக்கப்படுகின்றன

எதிர்கால சமுதாயத்தை தவறான வழியில் இட்டுச்செல்லும் வகையில் பாடப்புத்தகங்கள் அச்சிடப்படுகின்றன. தமிழ் மக்களின் வரலாறுகள் திரித்துக்காட்டப்பட்டுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகளால் எதிர்கால சந்ததியினருக்கு உண்மை வரலாறுகள் மூடிமறைக்கப்பட்டு தெரியாமல் போய்விடும்.

எந்தச் சமூகமாக இருந்தாலும் எந்த மொழி பேசுபவர்களாக இருந்தாலும் அவர்களுடைய பாரம்பரியம் வரலாறு திரித்துக் காட்டப்படக்கூடாது. பாடப்புத்தகங்களில் பிழையான தகவல்களை வழங்குவது சம்பந்தப்பட்ட சமூகங்களைப் பெரிதும் மனத் தாக்கத்திற்கு உள்ளாக்கும்.

வன்னிப்பிரதேசத்தில் ஆசிரியர்கள் மத்தியில் அதிருப்தியான நிலைமை காணப்படுகின்றது. தேசிய பாடசாலைகளில் படிப்பிக்கும் ஆசிரியர்கள் வசதிகளை அனுபவிக்கின்றனர். அதேவேளை, கஷ்டப்பிரதேசங்களில் படிப்பிக்கும் ஆசிரியர்கள் தொடர்ச்சியாகப் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். எனவே, கூடுதலான காலம் கஷ்டப்பிரதேசங்களில் படிப்பிக்கும் ஆசிரியர்களுக்கு தேசிய பாடசாலைகளில் படிப்பிக்கும் வாய்ப்பை அளிக்கும் வகையில் இடமாற்றங்களை வழங்க வேண்டும்.

அதேவேளை, பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் போது குடிசன மதிப்பீட்டு அடிப்படையில் தெரிவு செய்யவேண்டும் - எனவும் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்தார்.. (சி)

## புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இத் தாக்குதலில் வீடுகளும், பாடசாலை ஒன்றும் மற்றும் தபால் நிலையமும் சேதமடைந்துள்ளன.

நேற்று முற்பகலும் பளை, இயக்கச்சிப்பகுதிகள் மீதும் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, நேற்றுப் பிற்பகல் நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்கள் விடுதலைப் புலிகளின் அடையாளம் காணப்பட்ட இலக்குகள் மீதே நடத்தப்பட்டுள்ளன என்றும் விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்திருக்கின்றார்.

விடுதலைப் புலிகளின் இலக்குகள்வெற்றிகரமாக தாக்கி அழிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற விருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி பாடசாலை, இராணுவ காவல் மையங்களுக்கு நெருக்கமாக அமைந்திருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.(சி)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னைய அரசாங்கங்களுக்கு அளித்த உதவிகளை விட அமெரிக்கா தற்போதைய அரசாங்கத்துக்கு அதிக படைத்துறை உதவிகளை வழங்கி வருகின்றது. விடுதலைப் புலிகளை முறியடிப்பதற்காக அமெரிக்கா நேரடியான படைத்துறை உதவிகளையும் மறைமுகமான படைத்துறை உதவிகளையும் வழங்கி வருகின்றது.

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்வனவுகளைத் தடுப்பதற்காக அமெரிக்காவில் மட்டுமல்லாது உலகெங்கும் நடவடிக்கைகளில் அமெரிக்கா ஈடுபட்டு வருகின்றது.

கடந்த வாரம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சொத்துக்களையும் அமெரிக்கா முடக்கியிருந்தது. இது விடுதலைப் புலிகளுக்கு மட்டுமல்ல முழு தமிழ் சமூகத்திற்கும் விடுக்கப்பட்ட செய்தியாகும் - என்று கட்டுரையில் எழுதப்பட்டுள்ளது.

பாகிஸ்தானும் இலங்கையும் மிக நெருங்கிய நட்பு நாடாக அந்தக் கட்டுரையில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. (அ)

# வடபுல முஸ்லிம்களின் நம்பிக்கையை தென்பகுதி மக்கள் வீணடிக்கக் கூடாது

## சபையில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கோரிக்கை

கொழும்பு,நவ.27

''தென்பகுதி மக்கள் மீது கொண்ட உயர்ந்த நம்பிக்கை காரணமாகவே வடபுலத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் தென்பகுதியில் வந்து குடியேறினர். அந்த நம்பிக்கை வீண்போகக் கூடாது''

- இவ்வாறு அனர்த்த முகாமைத்துவ மீள் குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் நேற்று நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வடபுலத்தில் இருந்து முஸ்லிம்கள் இடம்பெயரநேர்ந்தபோது 20 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இந்தியாவுக்கு போயிருக்க முடியும். ஆனால், அப்படிச்செய்யாமல் தென்பகுதி மக்கள் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாகவே அவர்கள் தென்பகுதியில் வந்து குடியேறினர்.

வடமாகாணத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் பிள்ளைகளுடைய கல்வி அபிவிருத்திக்கு இதுவரை காலமும் எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால், இடம்பெயர்ந்த 20 ஆயிரம் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனினும், எமது கோரிக்கையை ஏற்றுக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இம் மாணவர்களுக்காக மேலதிக ஆசிரியர்களை நியமித்து ஊக்கமளித்துள்ளார்.

அதேபோன்று, உயர் கல்வி அமைச்சரும் செயற்படவேண்டும். இடம்பெயர்ந்து வந்தவர்கள் புத்தளம் மாவட்டத்திலேயே பெரும்பான்மையாக வாழ்வதால் பல்கலைக்கழகத் தெரிவின்போது புத்தளம் மாவட்ட மாணவர்களுக்கான கோட்டா பாதிக்கப்படுவதாகக் குற்றம் சாட்டப்படுகின்றது. இவர்களுடைய குற்றச்சாட்டும் நியாயமானதுதான்.

இவ்விடயத்தில் கல்வி அமைச்சர் விசேடமான அடிப்படையில் ஆசிரியர் நியமனங்களை வழங்கியது போல் உயர் கல்வி அமைச்சரும் விசேட வேலைத்திட்டம் ஒன்றை விடுத்து புத்தளத்தில் இடம் பெயர்ந்து வாழும் முஸ்லிம் மாணவர்களுக்கும் பல்கலைக்கழக அனுமதிக்கு வாய்ப்புகளை ஏற்படுத்தவேண்டும். என்றார். (சி)

# அனுராதபுரம் மகாவிலாச்சிய பகுதியில் சிங்கள விவசாயிகள் சுட்டுக்கொலை!

கொழும்பு,நவ.27

அநுராதபுரம் மாவட்டத்தில் எல்லைப்புறப் பிரதேசமான மகாவிலாச்சியவில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு பெண் உட்பட நான்கு சிங்கள விவசாயிகள் நேற்றுக்காலை சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளே இத்தாக்குதலை நடத்தினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தாக்குதலை நடத்தியோர் அருகில் இருக்கும் வில்பத்து வனவிலங்குச் சரணாலயத்துக்குள் தப்பிச் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இதனால் அப்பகுதியில் படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டு அவர்கள் தீவிர தேடுதலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது.

மேற்படி தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த நான்கு சிங்கள விவசாயிகளினதும் சடலங்கள் வயலில் இருந்து சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டிருக்கின்றன. அவை அடையாளங்காணப்பட்டிருக்கின்றன.

வில்பத்து சரணாலயத்தில் கடந்த மார்ச் மாதம் நான்கு வனவிலங்குக் காவலர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

**பிறைற்மன் கல்வி நிலையம்**
நீராவியடிப் பிள்ளையார் கோயில் முன்பாக
பிறவுண் வீதி, யாழ். நகர்

**புதிய கல்வியாண்டு - 2008**
தரம் 1 முதல் O/L வரை சகல
வகுப்புக்களும் எமது 'Supper Grade'
ஆசிரியர் குழுவால் கற்பிக்கப்படும்.
* கணிதம் - சீலன், சசிகாந், வசந்தன்
* விஞ்ஞானம் - பார்த்தீபன், யூட்
ஏனைய சகல பாடங்களும் நடைபெறும்.
ஆரம்பம் 28.11.2007 wed. 4.30 p.m

**நீர் உயிர் வள விஞ்ஞானம் 10,11**
ஆண்டு 10,11இற்கு பயன்படக் கூடிய விஞ்ஞானம், நீர் உயிர் வளம் பாடங்களினை உள்ளடக்கிய முற்றிலும் எதிர்பார்க்கும் மாதிரி வினாக்களும் விடைகளும் வேகமாக விற்பனையாகின்றன.
இடம்:
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி ரோகினியம்மா தவயோகராஜா

திருமதி ரோகினியம்மா தவயோகராஜா நேற்று(26.11.2007) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை தவயோகராஜா (மின்சாரசபை ஊழியர், பருத்தித்துறை) அவர்களின் அன்பு மனைவியும் திருமதி பா.நந்தினி(சுவிஸ்), திருமதி ஜெ.நளினி, திருமதி அ.நளாயினி, தீபன்(இலங்கை வங்கி, அச்சுவேலி) ஆகியோரின் அன்புத் தாயும் பாலசுப்பிரமணியம்(சுவிஸ்), காலஞ்சென்ற ஜெயசங்கர் மற்றும் அரவிந்தன்(இலங்கை வங்கி பருத்தித்துறை), ஆகியோரின் அன்பு மாமியும் பா.கோபிகன், பா.கோகுலன்(சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியை இன்று (27.11.2007) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறை கோரியடி மயானத்தில் நடைபெறும்.

*வேதவனம் ஒழுங்கை,*
*தும்பளை வீதி, பருத்தித்துறை.*

தகவல்:
ஜெ. அரவிந்தன்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] யார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org